Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு


ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை – 54 ஆடி, 2022 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00

# ரணிலின் வருகையும் கோட்டா கோகம போராட்டமும்



- அரகலய யோசனைகளை தீவிரமாக கருத்தில் எடுப்பது பற்றி...
- இராஜபக்சவாதிகளின் களியாட்டம் தற்காலிகமாகவே நசுக்கப்பட்டுள்ளது
- பிணைமுறிக் கடன்களின் மீள் கட்டமைப்பு

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# அரகலய யோசனைகளை தீவிரமாக கருத்தில் எடுப்பது பற்றி



– தமிழாக்கம் –நிமிர்வு

இலங்கை மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்ததன் காரணமாக காலிமுகத்திடலில் மக்கள் போராட்டம் (அரகலய) ஆரம்பிக்கப்பட்டு அதன் அழுத்தம் காரணமாக பிரதமர் பதவி விலகியதும் சனாதிபதி கோத்தாபய நாட்டை விட்டு ஓடியதும் நடந்துள்ளன. மக்களால் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ரணில் விக்கிரம சிங்க புதிய சனாதிபதியாக நாடாளுமன்றத்தில் தெரிவாகிஉள்ளார். கோத்தாபய சனாதிபதி ஆகியதும் ரணில் சனாதிபதி ஆகியதும் தமிழ் மக்களினதும் அவர்களது அரசியற் தலைவர்களினதும் எந்த விதமான பங்களிப்பும் இல்லாமல் நடந்து முடிந் துள்ளன. கோத்தாபயவை நாட்டை விட்டுத் துரத்திய தில் தமிழ் தரப்பின் பங்களிப்பு பெரிதாக இருக்க வில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தாலும் அந்த முயற் சிக்கு தமிழ் மக்களின் தார்மீக ஆதரவு இருந்திருக் கிறது. சிறிலங்கா தேசிய அரசியலுக்கு புறம்பாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அரகலய போராட்டத்தில் நின்று களமாட வேண்டும் என்று நாம் கோரியிருந்தோம்.

ரணில் சனாதிபதியாக வந்தவுடனே பொருளா தார பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்று மாயை உருவாக்கப்பட்டு வருகிறது. மக்கள் போராட்டத்தை நீர்த்துப் போக வைக்கப்படும் ஒரு முயற்சி இது. ஆனால் பொருளாதாரப் பிரச்சனை சுலபமாக தீர்க்கப் பட முடியாதது. ஆகவே இந்தப் பொருளாதார நெருக் கடிக்கு எதிரான போராட்டம் தொடரப் போகிறது. அந்தப் போராட்டங்கள் வன்முறை கொண்டு அடக்கப் படுவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் நடக்கின்றன. ஆனாலும், அந்தப் போராட்டத்தில் தமிழ் தேசியத்தின் நலன்களை எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பதைப் பற்றி எமது அரசியற் தலை மைகளும் வெகுசன அமைப்புகளும் தீவிரமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.

அரகலய போராட்டத்தின் பின்னால் நிற்கின்ற தாராளவாத ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அரசியற் செயற்பாட்டாளர்களின் நம்பிக்கைகளுக்கும் முன்னணி சோசலிசக் கட்சி யின் தீவிர சோசலிசத்துக்கும் இடையிலே, இருக் கின்ற அல்லது இல்லாத உறவுகள் பற்றி பேராசிரி யர் ஜயதேவ உயங்கொட groundviews.org தளத்தில் 2022 ஆடி 19 ஆம் திகதி ஒரு கட்டுரை யை எழுதியிருக்கிறார் (https://groundviews.org/2022/07/19/taking-aragalaya-ideas-seriously/).

சோசலிச சிந்தனைக்கும் தாராளவாத ஜன நாயகத்துக்கும் இடையில் ஏற்பட்டு இருக்கும் இந்த ஊடாட்டத்தில் தேசிய இனங்களின் நலன்களும் சேர்க்கப்பட வேண்டும் என்பதை இந்தக் கட்டுரை கருத்தில் கொள்ளவில்லை. ஆனாலும், எவ்வாறு சோசலிச சிந்தனையும் தாராளவாத ஜனநாயகமும் ஒரு உரையாடலுக்கு போகவேண்டும் என்று அவர் வாதிடுகிறாரோ, அதே போன்று, அரகலய போராட்ட செயற்பாட்டாளர்களின் நோக்கங்களுக்கும் தமிழ் அபிலாசைகளுக்கும் இடையிலே உறவை உருவாக்க ஒரு கலந்துரையாடல் நடக்க வேண்டும். அடுத்து, அந்தக் கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தரு கிறோம்.

அரகலய இயக்கத்தின் முக்கிய குரலாக முன்னணி சோசலிசக் கட்சி (FSP) ஆடி மாதம் முன்னுக்கு வந்தது. இது பல எதிர்மறையான விளைவு களுக்கு வழிவகுத்துள்ளது. குறிப்பாக நகர்ப்புற தொழில் மற்றும் வணிக வர்க்கங்கள், மற்றும் வலுவான தாராளவாத–ஜனநாயக நம்பிக் கைகளைக் கொண்ட அரசியற் செயற்பாட்டாளர் கள் மத்தியில் பல கேள்விகளையும் விவாதங் களையும் இது எழுப்பியுள்ளது. FSP இன் இறுதி நோக்கங்கள் குறித்தும் அதன் தீவிரவாத நிகழ்ச்சி நிரல் குறித்தும் அவர்கள் கரிசனை கொள்கிறார்கள். வன்முறை அரசியல் வரலாற்றைக் கொண்ட சில

தீவிர சோசலிஸ்டுகள், ஜனநாயக ரீதியான அரகலய போராட்டத்தை கைப்பற்றி விட்டனர் என்ற கருத்து நகர்ப்புற நடுத்தர வர்க்க குடிமக்கள் மத்தியில் அதிக ஈர்ப்பைப் பெறுகிறது. இந்த தீவிரவாதிகள் இலங்கை யின் தாராளவாத, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை அழிக்க முற்படுகிறார்களா? தோல்வியுற்ற அரபு வசந்தத்தின் திசையில் நமது அரகலயவையும் கொண்டு சென்று விடுவார்களா? இன்று விவாதிக்கப் படும் சில கேள்விகள் இவை.

இதுபோன்ற கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலளிப்பதற்குப் பதிலாக, இந்தக் கட்டுரையில், இலங்கையில் மறு ஜனநாயகமயமாக்கலில் இன்று எழுந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத் தில் இந்த இரண்டு முக்கிய இழைகளுக்கு இடையி லான உரையாடல் ஒன்று நடக்க வேண்டும் என்பதை வாதிட முயற்சிக்கிறேன்.

முதலாவது இழை, தாராளவாத, பிரதிநிதித் துவ, நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற எங்கள் பாரம்பரியம். இது 1930 களின் முற்பகுதியிலிருந்து ஒரு வரலாற்றை கொண்டுள்ளது. அது சமீபத்திய தசாப்தங்களில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள் ளது. இரண்டாவது இழை, அநீதியான, அடக்குமுறை அதிகாரத்திற்கு எதிரான சமூகப் போராட்டங்களில் பிரபலமாக காணப்படும் ஒரு ஜனநாயகம். இந்த இழையானது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள் ளது. இது முதல் இழையின் வரலாற்றை விட நீண்ட தாக இருக்கக் கூடும். இருந்தாலும்கூட, இந்த இழைக்கு ஜனநாயகத்தின் தாராளவாத பாரம்பரியத்தினால் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

இலங்கையின் நவீன ஜனநாயகத்தின் வரலாற்றுக் கட்டுரைகளில் இரண்டாம் இழைக்கு அதிக அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அரகலய முக்கியமாக இரண்டாவது இழையை பிரதிநிதித் துவப்படுத்துகிறது. சுவாரஸ்யமாக, இலங்கையில் 2022 பங்குனி – ஆடி காலப்பகுதி ஜனநாயகத்தின் இந்த இரண்டு இழைகளினதும் சந்திப்புக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அவை சந்தித்தும் உள்ளன.

இருப்பினும், இந்த இழைகள் ஒருவரையொரு வர் அடையாளம் காணவில்லை. இந்தக் குறிப்பிட்ட வரலாற்றுத் தருணத்தில், இலங்கைக்கு குறிப்பாகத் தேவைப்படும் தனித்துவமான ஜனநாயகமயமாக்கல் நிகழ்ச்சி நிரல் பற்றிய உரையாடலை அவர்கள் தொடங்கவில்லை. இருவருக்குமிடையில் ஒரு ஆக்க பூர்வமான உரையாடல் மூலம் மட்டுமே ஜனநாயக ரீதியான மக்கள் எழுச்சியின் போது திறக்கப்பட்ட வரலாற்றுத் தருணத்தின் நோக்கங்களை நிறை வேற்ற முடியும்.

அரசாங்கத்துக்கு எதிரான பக்கத்துக்கும் மேலாக ஆழமான ஒட்டுமொத்த அரசியல் நெருக்கடி யின் பரிமாணத்தையும் அரகலய கொண்டிருந்தது. அதன் பல கோரிக்கைகள் மற்றும் கோஷங்கள் அரசி யல் நெருக்கடிக்கு எதிர்வினையாற்றும் தனித்து வமான அரசியல் தன்மையைக் கொண்டிருந்தன. அதாவது, அவை ராஜபக்ச அரசாங்கத்தை அல்லது பதவியில் இருக்கும் நபர்களை அகற்றும் இலக்கைத் தாண்டிய நோக்கை கொண்டிருந்தன.

இந்த அரசியல் கோரிக்கைகள் நாம் மிகவும் பழகிய பாரம்பரிய அர்த்தத்தில் நேரடியாக உணரப்படக் கூடியதாக ஆரம்பத்தில் இருக்கவில்லை. நமது அரசியல் கட்சிகளின் கிளர்ச்சிப் பிரச்சாரங் களில் பயன்படுத்தப்படும் மொழியிலோ பாணியிலோ அவை உருவாக்கப்படவில்லை. இளைஞர்களின் சமூக ஊடக (social media) கலாச்சாரத்திற்கு ஏற்ற வடிவத்திலும் மொழியிலும் தான் அவை வடிவமைக் கப்பட்டிருந்தன.

அவர்களின் முழக்கங்கள் நாட்டின் அரசியலில் ஒரு அமைப்பு மாற்றத்தைக் (System Change) கோருகின்றன. அத்துடன் ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்திற்கு பதிலாக ஜனநாயக நெறிமுறை களை மதிக்கும் அறநெறி சார்ந்த புதிய ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று கோருகின்றன. 'ஒப்பந்த அரசியல் இனி வேண்டாம்' என்ற கோசம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் உட்கட்சி உறவுகளில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும் ஊழல் ஒப்பந்த அரசியலை அம்பலப் படுத்துகிறது. அதனை நிராகரிக்கிறது.

'புதிய அரசியல் கலாச்சாரம்' என்ற கோசம் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் லஞ்சம் மற்றும் ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கானது. இது ஆட்சியாளர்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதை உறுதி செய்வதற்கு கோருகிறது. சிவில் மற்றும் அர சியல் உரிமைகளை மேம்படுத்துவதற்கு

(15 ஆம் பக்கம் பார்க்கவும்

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# காலிமுகத்திடல் போராட்டமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியலும்

காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் அதற்கு தமிழ் மக்கள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டும் என்று சொல்லி அதில் கலந்து கொண்டது கூட்டமைப்பின் ஒரு தரப்பு. போராட்டக்காரர் தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வரை நாம் அதில் கலந்து கொள்ள மாட்டோம் என்று தள்ளி நின்றது கூட்டமைப்பின் இன்னொரு தரப்பு. மொத்தத்தில் இந்த முக்கியமான கால கட்டத்தில் தமிழரின் தேசிய அபிலாசைகளின் பக்கம் நின்று ஓர் அரசியற் தலைமையை கொடுக்கத் தவறிவிட்டது கூட்டமைப்பு.

தெற்கின் தேசிய அரசியலின் ஊடாக போராட்டத்தைப் பார்க்காமல், அதேவேளை போராட்டத்தை விட்டு தள்ளியும் நிற்காமல் தமிழரின் சுயநிர்ணய உரிமையை முன்னிறுத்தி தமிழர் அரசியற் தலைமைகள் போராட்டக் காரர்களுடன் களமாடி இருக்க வேண்டும்.

அடுத்து, நாடாளுமன்றத்தில் நடந்த சனாதிபதி தேர்தலில், எந்த வேட்பாளரும் எமது உரிமையை அங்கீகரிக்கப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதில் தமிழர் தரப்பில் ஒரு வேட்பாளரை நிறுத்தி தெற்கின் அரசியலில் எமக்கு நம்பிக்கை இல்லை என்று முரசறைந்து சொல்ல கிடைத்த சந்தர்ப்பத்தையும் தமிழர் அரசியல் தலைமைகள் தவற விட்டனர்.

நாட்டில் பொருளாதார, சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான சர்வகட்சிகளின் தேசிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும். என ரணிலை சந்தித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தீர வேண்டுமெனில் சர்வகட்சி அரசாங்கம் அவசியமாகும். எனவே அதற்கு நிபந்தனையின்றி முழு ஒத்துழைப்பும் வழங்குவோம் என கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன். சர்வ கட்சி அரசுக்கு ஆதரவு வழங்க கோரி ரணில் எழுதிய கடிதம் தொடர்பில் ஊடகங்கள் வினவிய போது அவர் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்.

பொதுஜனபெரமுனவின் ஆதிக்கம் இல்லாத சர்வ கட்சி அரசுக்கு ஆதரவளிக்க தயார் என சுமந்திரனும் கூறியிருக்கிறார். ஆக மொத்தத்தில் தமிழ் மக்களின் எவ்வித கருத்துகளையும் கவனத்தில் கொள்ளாமல் காய் நகர்த்தி வருகிறது கூட்டமைப்பு. அரகலய போராட்டத்தை கையாண்ட விதத்தில் ஆகட்டும், சனாதிபதி தெரிவில் நடந்து கொண்ட முறையில் ஆகட்டும், சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டில் ஆகட்டும், தமிழ் மக்களோடு இன்று கூட்டமைப்பு இல்லை என்பது தெளிவாக தெரிகிறது.

மறுபுறத்தில், கொழும்பு அரசியலை மேற்கொள்ளும் மனோ கணேசனோ தான் அன்றாடம் என்ன செய்கிறேன் என்பதனை சமூக ஊடகங்களில் சொல்கிறார். அவை தொடர்பாக வரும் பின்னூட்டங்களுக்கு பதில் அளிக்கிறார். அரகலய போராட்டக் காரர்களை சந்தித்த அவர் பலவருடங்களாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையே உங்கள் முதல் கோரிக்கையாக இருக்க வேண்டும் எனவும், அப்படியாயின் தானும் ஆதரவளிப்பதாகவும் பகிரங்கமாக தெரிவித்துள்ளார். அரகலய போராட்டத்திலிருந்து தள்ளியும் நிற்காமல் அதேவேளை தனது தனித்துவத்தையும் இழக்காமல் போராட்டக் களத்தில் நின்றார். அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருந்து இறக்கும் தறுவாயில் தான் அவர்களது பிரச்சினைகள் பற்றி எமது அரசியல் வாதிகள் பேசுவார்கள். ஆனால், மனோ கணேசனோ தமிழ்மக்களின் முக்கிய பிரச்சினையான அரசியல் கைதிகள் பிரச்சினை பற்றி பேசி இருக்கிறார். இதுவே சரியான நடைமுறை.

எங்களின் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் தமிழ் தேசியம் என்று கூவிக் கொண்டு வாக்கு வேட்டைக்கு வருவார்கள். ஆனால், அரகலய தொடர்பாகவோ, நாடாளுமன்ற சனாதிபதி தெரிவு தொடர்பாகவோ, சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாகவோ தமிழ் மக்களின் வேணவா என்ன என்பதைப் பற்றி சிறிதும் கவனம் செலுத்தாதவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனை உடனடியாக தீரப் போகும் ஒன்று அல்ல. நான்கு ஐந்து வருடங்கள் செல்லலாம், அதற்கு மேலும் செல்லலாம். இந்த இக்கட்டான சூழலில் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சனைகளை தீர்க்க தமிழ் அரசியற் தலைமைகள் வழி காட்ட வேண்டும். அதே வேளை அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் தொடரப் போகின்றன. அரகலய 2.0 கூட ஆரம்பமாகலாம். அந்தப் போராட்டம் தொடர்பாக சரியான அரசியற் தலைமையையும் அவர்கள் வழங்க வேண்டும்.

- செ. கிரிசாந் -

# கொழும்பு கொந்தழிப்பும் ஈழத்தமிழரும் கற்பனையும் யதார்த்தமும் கொள்கை ஆய்வு

பகுதி - 02




**ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு. திருநாவுக்கரசு அவர்களால் 24.04.2022 அன்று நடாத்தப்பட்ட "கொழும்புக் கொந்தழிப்பும் ஈழத்தமிழரும் கற்பனையும் யதார்த்தமும் கொள்கை ஆய்வு" என்கிற உரையாடல் வகுப்பின் இறுதிப் பகுதி இங்கே பிரசுரமாகிறது.**

-மு.திருநாவுக்கரசு-

ஸ்பெயினில் 2014ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் போது ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயினை பாதுகாக்க முற்பட்டன. அது ஏன் என்பதை ஒரு அரசியல் பொருளாதார விளக்கமூடாக சொல்லலாம். ஸ்பெயினின் பிரச்சனை என்பது ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் அவர்களின் சுமையாக மாறும். எனவே ஸ்பெயினின் பிரச்சனையை தீர்க்காமல் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி போன்ற நாடுகள் நிம்மதியாக இருக்க முடியாது. எனவே இந்த நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் எல்லாம் சேர்ந்து ஸ்பெயினை இரவோடு இரவாக அதன் பொருளாதார பிரச்சனைகளிலிருந்து விடுவித்தார்கள்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனையை தீர்க்க இப்போது பல நாடுகள் முன் வருகின்றன. அதற்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. ஸ்பெயினில் அதை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படை தீர்மானத்திலிருந்த ஸ்பெயினுக்கு பொருளாதார உதவி வழங்கப்பட்டது. இலங்கையில் அப்படி அல்ல, "இறால் போட்டு சுறா பிடிக்கிறது போல." இலங்கைக்கு பல நாடுகள் உதவப் போகின்றன. சர்வதேச நாணய நிதியம் (IMF) உதவப் போகிறது, உலக வங்கி (world bank) உதவப் போகிறது. அமெரிக்கா உதவப் போகிறது. ஜப்பான் உதவப் போகிறது. இந்தியா, சீனா போன்ற நாடுகள் எல்லாமே இலங்கைக்கு உதவப் போகின்றன. இந்த நாடுகள் தங்களுடைய நலன் நோக்கு நிலையில் நின்று கொண்டு தான் இலங்கைக்கு உதவப் போகின்றன.

எனவே இலங்கையின் பிரதான பிரச்சனை என்னவென்றால் முதலாவதாக சொன்னது போல அமெரிக்க அரசியல் என்பது உலகம் பற்றியது. இலங்கையில் தமக்கு தேவையான அரசியல் இலாபத்தை எவ்வாறு தேடுவது என்பது பற்றியது தான். இலங்கைக்கு பணத்தை கொடுத்து இந்த அரசாங்கத்தை தக்க வைத்து கொள்ள வேண்டும். ஒரு குறுகிய காலத்திற்கு இவ்வாறு தக்க வைக்க இவர்களால் முடியும். இது முதலாவது பிரச்சனை. இனப் பிரச்சினை அப்படியே பொங்கி எழுந்து வெளியே வரும். அதனை தீர்க்க மாட்டார்கள்.

இந்தப் பின்னணியில் இலங்கையினுடைய பிரச்சனையை கைத்தொழில் மயமாக்கம் செய்தோ, விவசாயத்தை நவீன மயப்படுத்தியோ, மீன்பிடி தொழிலை நவீன மயப்படுத்தியோ இலங்கை உள்ளூர் உற்பத்தியை உருவாக்கியோ இவர்கள் தீர்க்கப் போவதில்லை. மாறாக வெளிநாடுகளில் தங்கள் பண்டங்களை வாங்குவதற்கு கடன் கொடுக்கப் போகிறார்கள். இதன் மூலம் பணத்தைக் கொடுத்து இலங்கைக்குள் தங்களுடைய வர்த்தகத்தையும் தங்களுடைய அரசியல் பிடியையும் பிடிக்கப் போகிறார்கள்.

இலங்கை தன்னுடைய இறைமையை எல்லா வழிகளிலும் இழந்தது தமிழ் மக்களை அழித்ததன் மூலம்தான். எல்லா நாடுகளிடத்திலேயும் கை ஏந்தி தன் முழு இறைமையையும் விற்கப் போகிறது இலங்கை. தன்னுடைய சகோதர இனத்தோடு இலங்கையின்

அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு ஈழத் தமிழர்களும் இலங்கையிலுள்ள ஏனைய இனங்களும் சிங்கள மக்களும் சேர்ந்து இறைமையை பங்கிட்டு வாழ் வதற்கு பதிலாக, **அரசியல் அதிகாரத்தை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்தளித்து வாழ்வதற்கு பதிலாக இலங்கை இறைமையை முற்றிலும் விற்று வாழ்கின்ற ஒரு அரசியலை இலங்கையின் சிங்கள தலைவர்கள் அரங்கேற்றி விட்டார்கள்.** இதிலிருந்து மீள முடியாது. எனவே தற்காலிகமாக ஏற்பட கூடிய பொருளாதார மீட்சி என்பது அந்த அரசை பாதுகாப்பது சம்பந்தப் பட்டது. இறுதியாக ஒரு கட்டத்தில் இனப்பிரச்சனைக் கான தீர்வு பற்றிய போராட்டம் திரும்பி வரும்.

அமெரிக்காவிற்கு எப்படி அமெரிக்கா எனும் நாடு உலகமாக இருக்கிறதோ அவ்வாறே சீனாவிற்கு சீனா என்ற நாடு என்பது இந்துமா கடலாக இருக் கிறது. சீனாவின் கண்ணோட்டத்தில் இந்துமா கடல் சீனாவின் ஒரு பகுதி. சீனா தெளிவாகச் சொல்கிறது. இலங்கையில் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் கை ஓங்கி இருக்கின்ற நிலையில் சீனா சற்று ஓரடி ஈரடி பின்னே போயிருக்கிறது. இருந்தாலும் சீனா வினுடைய இறுதி தீர்வு அதனுடைய கட்டமைப்பான அபிவிருத்தி வளர்ச்சி தான். அது இலங்கையோடும் பாகிஸ்தானோடும் பர்மாவோடும் சேர்த்து கடல் ரீதியாக தன்னுடைய கட்டமைப்பை விருத்தி செய் கிறது. எனவே அதிலிருந்து சீனா பின்வாங்கி போய் விட முடியாது. பின்வாங்கினால் சீனாவின் உலகத் தில் இந்தியா இல்லாமல் போய்விடும்.

இந்தியாவிற்கு இலங்கையில் ஒரு தளம் தேவையில்லை. ஏனென்றால் 7500 கிலோமீட்டர் நீளமான இந்துமா கடல் கரையோரத்தை கொண்ட இந்தியாவிற்கு இலங்கையில் தளம் தேவையில்லை. மாறாக இந்தியாவிற்கு தேவைப்படுவது என்ன வென்றால் இலங்கைக்குள் எந்தவொரு நாடும் வரக்கூடாது என்பது தான். சீனாவோ அமெரிக்காவோ இலங்கையில் தளம் அமைக்க கூடாதென்பது தான் இந்தியாவின் தேவை. இந்துமாகடலில் இல்லாத சீனா விற்கு தான் இலங்கை தேவை.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா அப்படி அணுகும் என்று தெரிந்திருப்பதனால், இந்தியா எப்பொழுதுமே அனுசரித்துப் போகும் என்று தெரிந்து இருப்பதனால் நெருக்கடி வரும்போது இந்தியாவிடம் இலங்கை காசு வாங்குகிறது. காசு வாங்கிக் கொண்டு நாளைக்கு கையை விடும். இன்றைக்கு இருக்கின்ற இராஜபக்சக்கள் இன்னுமோர் ஐந்து வருடங்களில் இருப்பார்கள் என்று இல்லை, இன்னுமொரு புதிய அரசாங்கம் வரும். அது இந்தியாவுடன் சுமூக உறவு வைத்திருக்க வேண்டுமென்பது நிபந்தனை கிடையாது. அவர்கள் தங்களது சூழலுக்கு பொருத்த மானவர்களுடன் உறவை வைத்திருப்பார்கள்.

ஆனால், கட்டமைப்பு என்பது பலமானது. சீனா இலங்கையை கட்டமைப்பு வளர்ச்சியூடாக அணுகுகிறது. இந்தியா உதவி செய்து இலங்கையை தன்னுடன் அணைக்கப் பார்க்கிறது. உதவி செய்யும் உறவு ஒரு நிமிடத்தில் அற்று போகலாம். கட்ட மைப்பை வெட்ட முடியாது. இந்தவகையில் இன்று இந்தியா வைத்து இருக்கின்ற மென்மையான போக்கை நாளை கைக்கொள்ள முடியாது. இந்தியா விரும்பினாலும் கைக்கொள்ள முடியாது. இனப் பிரச்சினை பூகம்பமாக எரிமலையாக எழும்பும். அது தீர்க்கப்படாது. ஈழத்தமிழர்கள் பலமான பாரம்பரிய கலாச்சார பின்னணியை கொண்டவர்கள். இந்த பிராந்தியத்தில் தென்னிந்தியாவுடன் சேர்த்து அவர்களுக்கு நீண்ட வரலாறு உண்டு.

இதுவரை நாங்கள் இலங்கையினுடைய பிரச்சினை தீர்க்கப்படாத அடித்தளத்தை கொண்டது என்பதையும், அது அரசியல் பொருளாதார ரீதியாக பொருட்களை வாங்கி விற்கின்ற ஒரு தரகு வர்த்தக நாடாக இருக்கிறது என்பதனையும் நாங்கள் கருத் தில் கொண்டோம். ஆனால் தீவாக இருக்கிற நாடு மீனை இறக்குமதி செய்கிறது எனும் துயரத்தை புரிந்து கொள்வதில் இருந்து இலங்கையினுடைய அரசியல் பொருளாதாரத்தை பார்ப்போம். ஈழத்தமிழர்களு டைய மூளை இலங்கையினுடைய அரசை கட்டமைக்க பயன்படவில்லை. ஈழத்தமிழர்கள் இலங்கை அரசிற்கு விசுவாசமாக இல்லை. சம்பளம் பெறுகின்ற உத்தி யோகத்தர்கள் இருக்கிறார்கள், அது வேற விடயம். ஆனால் இலங்கையை கட்டி வளர்க்க வேண்டும் என்ற பற்று பாசத்தோடு இலங்கை தமிழர்களுடைய மூளை இலங்கை அரசுக்கு உதவவில்லை, உதவவும் மாட்டாது. அந்த சிந்தனையோடு நாங்கள் யாரு மில்லை. ஆதலால் ஈழத்தமிழர்களுடைய மூளை வளம் என்பது இலங்கையை கட்டியெழுப்ப போவதில்லை.

இலங்கை சிங்களவர்களுடைய மூளை தமிழர்களை ஒடுக்குவதிலேயே திருப்பப்பட்டிருக்கிறது. எனவே அதுவும் நேர்மறையான பாத்திரத்தை கொள்ளாது. சிங்களவர்களோடு இருக்கின்ற நிபுணர்கள் அறிஞர்கள் எல்லோரும் தமிழர்களை எவ்வாறு ஒடுக்குவது என்பதற்கு தங்களுடைய மூளையை செலவழிக்கின்றார்கள். தமிழர் தரப்பு தம்மை மீட்பதற்கு மூளையை எவ்வாறு பயன்படுத்துவது என்று சிந்திப்பது குறைவு. அவர்கள் வெளிநாடுகளுக்கு போய் விடுகிறார்கள். அதிலிருந்து தமிழ் தரப்பு தனது மூளையை பயன்படுத்துகிற ஒரு கட்டம் வரும். அது தவிர்க்க முடியாதது. நிச்சயமாக வரும். இதை நான் கற்பனையில் சொல்லவில்லை. இதற்கு ஒரு யதார்த்தம் உண்டு.

சரி இப்படிப்பட்ட இந்த நிலையில் நாங்கள் அரசியல் பொருளாதாரம் பற்றி உள்நாட்டு, சர்வதேசம், பூகோளம் என்ற மூன்று அடுக்குகளிலும் வைத்துப் பார்ப்போம். இப்பொழுது பாருங்கள். வெறும் உள்நாட்டு கண்ணோட்டத்தோடு இலங்கை அரசியலை நீங்கள் பார்த்தால் நிச்சயம் தோல்வியடைவீர்கள். இந்தியாவை வைத்து மட்டும் பார்த்தால் தோல்வியடைவீர்கள், அமெரிக்காவை வைத்து மட்டும் பார்த்தால் தோல்வியடைவீர்கள். ஆனால் இந்த மூன்று அடுக்குகளிலும் பார்த்தால் தோல்வியடைய மாட்டோம்.

உலக அளவில் முதலாம் உலக மகா யுத்தம் முடிந்த பின்பு லெனின் தன்னுடைய சோஷலிச பொருளாதார கொள்கை தோல்வியடைந்ததை உணர்ந்தார். எனவே புதிய பொருளாதார திட்டம் என்கிற கொள்கைக்கு போனார். அங்கு கலப்பு சந்தை பொருளாதாரத்தை கொண்டு வர முற்பட்டார். புதிய சிந்தனை தேவை என்பதை லெனின் உணர்ந்தார் என்பதை சுட்டிக்காட்டவே நான் இதனை கூறினேன். இந்த 1921ஆம் 22 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஒரு புதிய விழிப்புணர்வு ரஸ்யாவில் ஏற்பட்டது. முக்கியமாக ட்ரொஸ்கி, புக்காரின் என்கின்ற இரண்டு பேர் பொருளாதார கொள்கையை திடமாக முன்வைத்தனர். விரைவான கைத்தொழில் பொருளாதாரம் வேண்டுமென்று அவர்கள் ஆணித்தரமாக முன் வைத்தார்கள். மாறாக ஸ்டாலின் நிலச்சீர்திருத்தத்தையும் விவசாயத்தையும் முதன்மைப்படுத்தினார். அவர் சொன்னது சரி. ஆனாலும் அவற்றை விடவும் முக்கியமானதாக இருந்தது உண்மையிலேயே கைத்தொழில் மயமாக்கம் தான்.

ட்ரொஸ்கி, புகாரின் இரண்டு பேருமே கொலை செய்யப்பட்டு விட்டார்கள். புகாரின் மரண தண்டனை விதிக்கப்பட்டு ஸ்டாலினால் கொல்லப்பட்டார். ஸ்டாலின் அனுப்பியவரால் ட்ராஸ்கி மெக்ஸிக்கோவில் வைத்து கொல்லப்பட்டார். இந்த இரண்டு பெரிய சிந்தனையாளர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள். புரட்சியாளர்களை கொன்றது புரட்சியாளர்கள் தான். இது புரட்சியின் வரலாற்றில் சோகமான ஒரு உண்மை. இது வரலாறு முழுக்க நிகழ்கிறது.

இந்த ட்ரொஸ்கியினுடையதும் புகாரினினுடையதுமான கைத்தொழில்மயமாக்க கொள்கையை தான் டென்ஷியாவோபிங் பின்னர் கையில் எடுத்தார். ட்ரொஸ்கியும், புகாரினும் கொல்லப்பட்ட இடத்தில் ரஸ்யா கைத்தொழில் மயமாக்கத்தில் வீழ்ச்சியடைந்தது. அது சரணாகதி அடைந்தது. அது பனிப்போரில் வீழ்ச்சியடைந்த கதை ஒரு நீளமான சோகம். இந்த காலகட்டத்தில் தான் ரஷ்யாவினுடைய வீழ்ச்சியை கண்ணால் கண்டு கொண்டிருந்த டென்ஷியாவோபிங் அந்த இருவரினது கொள்கைகளையும் கையில் எடுத்தார்.

ஆனால், இந்த இரண்டு பேரினுடைய பொருளாதார கொள்கையிலும் முக்கியமான வேறுபாடு இருக்கிறது. புகாரினினுடையது உள்நாட்டு தேசிய அளவிலான நவீன கைத்தொழில் மயமாக்கம். ட்ரொஸ்கியினுடையது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கைத்தொழில் மயமாக்கம். இருவர் சொல்லியதிலும் முக்கியமான விடயம் என்னவென்றால் சோசலிச கட்டமைப்பிற்குள்ளே தொழில் மயமாக்கம் என்பது. ஆனால் டென்சியாவோபிங் ஏகாதிபத்திய அமைப்பிற்குள்ளே கைத்தொழில் மயமாக்கம் என்று சொன்னார். இந்த இரண்டு அமைப்புகளும் (system) வேறு வேறு.

இந்தியா ஒத்துழைப்பு பொருளாதாரத்தை (collaboration economy) ஐக் கொண்டு வந்தது. அது இந்திய பிரதமராக இருந்த நரசிம்மராவால் கொண்டு வரப்பட்டது. சீனாவில் 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டம் சுமாராக 15 வருடங்களின் பின் வளர்ச்சியை கண்ட பொழுது இந்தியா திகைத்து

போய் விட்டது. இந்தியாவில் இருந்தது ஏறக்குறைய மூடிய பொருளாதாரம். அது தேசிய முதலாளித்து வத்தோடு இருந்தது. தேசிய முதலாளித்துவத்தில் இந்தியாவினுடைய கைத்தொழில் உலக கைத் தொழில் பண்டங்களுடன் போட்டியிட கூடிய தன்மையை கொண்டு இருக்கவில்லை. எனவே இந்தியாவை ஒத்துழைப்பு பொருளாதாரத்திற்கு இட்டு சென்றவர் நரசிம்மராவ்தான்.

நான் எப்பொழுதும் ஒன்று சொல்வேன். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் இரண்டு பேர் பிரதானமான தூண்கள். ஒருவர், நேருவினு டைய பழைய அணிசாரா கொள்கை என்ற பிழை யான கொள்கையினை, பங்களாதேஸ் பிரச்சனையின் போது இந்தியாவை பலம் பொருந்திய தேசமாக உருவாக்குகின்ற மறுபக்கம் கொண்டு சென்ற இந்தி ராகாந்தி. இதன் பின்பு 1970களின் மத்தியில் அவர் செய்த உள்நாட்டு தவறுகளை நான் ஏற்கிறேன் என்பது அர்த்தம் அல்ல. அவருடைய வெளி நாட்டு கொள்கையில் இந்தியாவை மிக ஸ்திரமாக வழி நடத்தினார். இராணுவ ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் இந்தியாவை ஒரு பலமாக உருவாக் குவதில் 71 ஆம், 72 ஆம் ஆண்டு காலத்தில் இந்தி ராகாந்தியின் பங்களிப்பு அதிகம். இரண்டாமவர், இந்தியாவினுடைய பொருளாதாரத்தை மாற்றி அமைத்த நரசிம்மராவ். இன்று இந்தியா அனுபவிக் கின்ற பொருளாதாரம் நல்லது கெட்டது மேன்மை யானது மேன்மையற்றது எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தியா அனுபவிக்கின்ற இன்றைய பொருளாதாரத்தினுடைய தந்தை உண்மையான அர்த்தத்தில் நரசிம்மராவ் தான். அவருடைய ஒத்துழைப்பு பொருளாதாரம் தான்.

இப்போது சோவியத்தினுடைய வீழ்ச்சிக்கு காரணம் கைத்தொழில் இல்லாமல் போனது. சீனா வினுடைய உலகளாவிய ஏகாதிபத்திய வளர்ச்சிக்கு காரணம் அது கைத்தொழில் மயமாக்கத்திற்கு போனது. இந்தியா தானாக மாற்றத்திற்கு போக வில்லை. அது சீனாவினுடைய வளர்ச்சியினால் அதற்கு நிர்பந்திக்கப்பட்டு இந்த மாற்றத்திற்கு போனது. சரி இப்போது உங்களுக்கு இது பற்றிய ஒரு பார்வை வந்திருக்கும். இதன் பின்பு மிகப் பெரிய ஆசிய நாடுகளான இந்தியாவும், சீனாவும் திறந்த பொருளாதாரம் மற்றும் ஏகாதிபத்தியத் தோடு இணைக்கப்பட்ட கைத்தொழில் மயமாக்கம் என்பவற்றுக்கு போகிறார்கள். பின்பு உலகிலுள்ள அனைத்து நாடுகளும் ஆசிய ஆபிரிக்க நாடுகள், இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்துமே திறந்த பொருளாதாரம், கைத்தொழில் மயமாக்கம் என் கின்ற கொள்கைக்கு போயின.

1990 களின் மத்தியில் இந்த உலகம் முழுக்க கைத்தொழில் மயமாக்கம் என்ற கொள்கைக்கு 100 வீதம் வந்து விட்டது. இலங்கை இன்னும் வரவில்லை. இலங்கையை விடவும் பிந்தி வந்த நாடுகள் முன்னுக்கு வந்துவிட்டன. மலேசியா, தாய்வான், ஹொங்கொங் எல்லாம் மிகவும் பிந்திய வரலாறுகளை கொண்டவை. அவர்கள் முன்னுக்கு வந்துள்ளனர். இலங்கை வரவில்லை. இப்படியாக இலங்கையில் சீரழிந்து போகின்ற பொருளாதார கட்டமைப்பில் அவர்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டுக் கடன் என்பது வெளி நாடுகளுடன் ஒரு அனுசரிப்பைச் செய்ய உதவுமே தவிர இலங்கையை அபிவிருத்தி செய்ய உதவாது. இலங்கையை வாழ வைக்க உதவாது.

இலங்கையில் இன்றைய பாணுக்கும், பருப்புக் கும், எரிவாயுவுக்கும் சண்டை பிடிக்கின்ற இந்த மக்களோடு ஈழத்தமிழர்களை ஒப்பிடுவதா? 30 வருடமா மின்சாரம் இல்லை, எரிபொருள் கிடையாது, எரிவாயு, மண்ணெண்ணெய் கிடையாது. தமிழ் மக்கள் தங்களுடைய சுய சார்பு பொருளாதாரத் தால் தமது சொந்தக்காலில் தங்கி நின்றார்கள். நெல் இருந்தது, கால்நடை இருந்தது, பால் இருந்தது, மீன் இருந்தது, காட்டிலிருந்து பெற்ற உணவு இருந்தது. இந்த மக்களுக்கு குடிக்க ஐஸ்கிறீம் இல்லாமல் இருந்தி ருக்கலாம், அலங்காரமான ஆடை இல்லாமல் இருந் திருக்கலாம், ஆனால் அவர்கள் வாழ்ந்தார்கள். 30 வருட காலமாக வாழ்ந்த இந்த மக்களின் வாழ்க்கை யோடு பார்க்கிற பொழுது இந்த மூன்று மாத கால சிங்கள மக்களின் பிரச்சனைகள் தமிழர்களின் கண்ணில் ஒரு பொருட்டாக ஒரு போதும் வரப் போவதில்லை. தமிழ் மக்களின் இந்த 30 வருடங்கள் வாழ்ந்த வாழ்க்கை என்பது அவர்களுடைய பிரதேசத்தினுடைய சுயசார்பு தன்மை, அவர்களு டைய மனதில் ஊறிப்போய் இருக்கின்ற, அதாவது ஈழத்தமிழர்கள் எப்பொழுதும் எந்த துன்பத்திலும் தலை நிமிர்ந்து நிற்கின்ற ஒரு விடாமுயற்சியுள்ள சளைக்காத மக்கள் என்கின்ற தன்மை.

இத்தகைய பின்னணியில் இனி, மீளப் போகின்ற இலங்கையின் அமைப்பை மாற்ற (system change) வேண்டும் என்று நாமல் ராஜபக்ச சொல் கிறார். அவர் சொல்லும் அமைப்பு மாற்றம் என்பது என்ன? பொருளாதார முறையை மாற்றுவதற்கு பெயர் தான் அமைப்பு மாற்றம். அவர் சொல்லுவது அதுதான். அவர்கள் இந்த அமைப்பைத் தான் வைத் திருக்க போகிறார்கள். இன்றைய உலக வர்த்தக பொருளாதார அமைப்பைத்தான் வைத்திருக்கப் போகிறார்கள். பிரச்சினை அமைப்பு அல்ல. பிரச்சினையாக இருப்பது கட்டமைப்பு. இங்கே பிரச்சினை அமைப்பு (system) அல்ல கட்டமைப்பு (structure).

உதாரணமாக, அமெரிக்கா என்ற நாடு முதலா ளித்துவத்தை அமைப்பு (system) ஐ கொண்டு இருக்கிறது. சமஷ்டி அரசியலமைப்பை (federal constitution) கட்டமைப்பாக (structure) கொண்டி ருக்கிறது. அவர்களுடைய அரசியல் கட்டமைப்பு (political structure) சமஷ்டியாக இருக்கிறது. ஆகவே அமைப்பு வேறு கட்டமைப்பு வேறு. நாமல் சொல்கின்ற அமைப்பு என்னவென்று தெரியாது.

கட்டமைப்பை மாற்ற வேண்டும். இந்த கட்ட மைப்பு மாற்றப்படாத நிலையில் ஒரு தீர்வும் கிடைக்க போவதில்லை. ஆதலினால் திரும்பவும் தெளிவான வார்த்தையில் சொல்வதானால், **ஈழத்தமிழர் களுடைய அரசியல் பிரச்சனை தீராத வரைக்கும் இலங்கையில் எந்த பொருளாதாரவிருத்தியும் இல்லை.** தமிழ் மக்களின் மூளையில் சமாதானம் என்கின்ற ஒரு வார்த்தை எழாத வரைக்கும் அவர் களிடமிருந்து முதலீட்டுக்கும் இலங்கையில் இட மில்லை. வெளிநாடு கடன் கொடுக்கும். முதலீடு செய்யாது. இலங்கையில் இருக்கக் கூடிய இந்த அரசியல் கொந்தளிப்புக்கு மத்தியில் யாரும் துணிந்து முதலீடு செய்ய வர மாட்டார்கள். இது ஒரு ஆழமான பிரச்சனை.

உலகத்தில் ஒரே ஒரு கருத்தியல் தான் இருக்கிறது. இதில் நாடுகளுக்கு இடையில் எல்லை எதுவும் கிடையாது. பனிப்போர் முடிந்ததன் பின்பு திட்டவட்டமாக சந்தைப் பொருளாதார ஏகாதிபத்திய பொருளாதார முறை தான் உலக ஒழுங்காக இருக் கிறது. இது தான் உலகம் முழுவதற்குமான கருத் தியல். அமெரிக்காவினதும் இது தான், சீனாவினதும் இது தான், இந்தியாவினதும் இது தான், ரஸ்யாவின தும் இது தான். எனவே உலகத்தில் இந்த கருத்தியலில் வேறுபாடு என்று எந்தவொரு அரசிடமும் கிடையாது.

உலகம் முழுவதுமே ஒரே மாதிரியான கருத்தியலின் கீழ் உள்ளன. அப்படியானால் நாடு களுக்கு இடையிலான போராட்டங்கள், முரண்பாடு கள் என்ன? அங்கு ஒரு போட்டி இருக்கிறது. ஒரே கருத்தியலுக்குள் போட்டிகள் இருக்க முடியும். ஒரு சந்தை முறைக்குள் பொருளாதாரப் போட்டி நிகழும். ஆனால் அந்த போட்டி பகைமை கொண்ட தாக இருக்கப் போவதில்லை. எல்லா நாடுகளும் ஒரு கருத்தியலைத் தான் கொண்டிருக்கின்றன.

இதற்குள் இலங்கையின் நிலை என்ன? வர்த்தக பொருளாதாரம் தான் அதனுடைய கருத்தியலாக இருக்கிறது. கைத்தொழில் பொருளாதாரம் கிடை யாது. விவசாய பொருளாதாரம் தான் இருக்கிறது. அங்கும் நவீன மயமாக்குதல் கிடையாது. இது அவர்களுடைய பொருளாதாரம் பற்றிய அடிப்படை பிரச்சனை. இலங்கையினுடைய ஆட்சியில் இருக் கின்ற அல்லது கல்வி கற்றுக் கொண்டு இருக்கின்ற நிபுணர்கள் மூடிய பொருளாதாரத்திலிருந்தும் வர்த்தக பொருளாதாரத்திலிருந்தும் வெளிவந்த வர்கள் தான். மூடிய பொருளாதாரம் வர்த்தக பொரு ளாதாரம் என்பவற்றிலிருந்து வந்தவர்களுக்கு உற்பத்தி சார்ந்த ஒரு கைத்தொழில் மயமாக்கல் சிந்தனை வரவில்லை. வர இயலாது. அது கொஞ்ச காலம் எடுக்கும். அதற்கு புரட்சிகரமாக சிந்திக்கிற நல்ல தலைவர்கள் தேவை.

அது ஈழத்தமிழர்களுடைய பிரச்சனையை தீர்க்கின்ற வகையிலான ஒரு புரட்சிகர மாற்றம் ஒன்று சிங்களவர்கள் மத்தியில் வந்தால் தான் சாத் தியம். சிங்கள மக்கள் மத்தியில் பெருந் தலைவர் (great leader) கிடையாது. சிறந்த தலைவர் என்று சொல்லக் கூடிய ஒருவரும் கிடையாது. அங்கு தலை வர்கள் சாகசம் செய்வார்கள். எதிரிகளை வீழ்த்து வது தான் அவர்களுடைய சாதனை. அவர்களுக்கு நாட்டை கட்டியெழுப்புவது ஒரு சாதனை இல்லை. சமாதானத்தை உருவாக்குவது அவர்களுக்கு சாதனை இல்லை. மக்களை அழிப்பது தான் அவர்களுடைய சாதனை. இப்படிப்பட்ட சாதனையை கொண்ட தலை மைத்துவத்தையும், அறிவியலையும், இராணுவத்தை யும், தலைவர்களையும் கொண்ட ஒரு தேசத்தில்

இனியும் அமைதி நிலவும் என்கிற வரலாற்று போக்கு கண்ணுக்கு தெரியவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் இப்போது வரக்கூடிய எந்தவொரு தற்காலிகமான சுமூகநிலையும் ஈழத் தமிழர்களுடைய தீர்க்கப்படாத பிரச்சனை. அதாவது இனி எந்த அரசியல் யாப்பு திருத்தமும் கொண்டு வரமாட்டார்கள். தமிழர்களுக்காக எந்தவித சமஷ்டி ஆட்சியும் கொண்டுவர தயாராக இருக்கமாட்டார்கள். தமிழர்களுக்காக போராட வேண்டிய ஒரு கால கட்டத்தை தமிழர்கள் 100 வீதம் தவற விட்டிருக் கிறார்கள். அதாவது, ஈழத்தமிழர்கள் இந்தியாவிற் கும் அமெரிக்காவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் தெளிவாக சொல்லியிருக்க வேண்டும். எமக்கு சமஸ்டி முறை வேண்டும் நாங்கள் இலங்கையை கட்டி எழுப்ப ஒத்துழைப்போம் என்று சொல்லியிருக்க வேண்டும். சமஸ்டி முறையின் கீழ் அரசியல் தீர்வு காண வேண்டும் என்று போராடி இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யும் பொழுது சிங்கள தலை வர்கள் சிங்கள மக்களை கைது செய்ய முடியாது என்பது போல தமிழ் மக்களை கைது செய்ய முடியாது. ஒரு சிங்கள மகன் கொல்லப்பட்டதற்கு மகா சங்கம் கண்டனம் தெரிவித்து இரங்கல் வெளியிட்டிருக் கிறது. ஒன்றரை இலட்ச மக்கள் கொல்லப்பட்டதற் காக ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும், இந்த கட்டத் தில் தமிழர்களும் சேர்ந்திருந்தால் மகா சங்கம் அப்படி தமிழர்களை புறக்கணிக்கின்ற நேரடியான நடவடிக்கையில் ஈடுபட்டு கைது செய்கின்ற நடவடிக் கைக்கு ஆதரவளிக்க முடியாது. அது ஒரு வகையில் எங்களுக்கு ஒரு தளத்தை தேடி தந்திருக்கும்.

கைது செய்து சிறைக்கு போவது என்பது அரசியலின் ஒரு அங்கம். எமது தலைவர்கள் கைதி களாக இருக்க தயாரில்லை. அவர்கள் பணங்களையும் பண்டங்களையும் பேணவும் பாதுகாக்கவும் தான் தயாராக இருக்கிறார்கள். இந்த பின்னணியில் தமிழர் கள் தலைவர்களால் கைவிடப்பட்ட மக்களாக இருக் கிறார்கள். தமிழர்களை கை விட்டது வெளிநாடுகள் மட்டுமல்ல. தமிழ் தலைவர்களும் கை விட்டிருக் கிறார்கள். இந்த நிலையில் இலங்கை மண்ணில் கை விடப்பட்ட மக்களாக இருக்கின்ற தமிழ் மக்களை வெளிநாடுகளும் கை விட்டு விடுகின்றன. இந்த ஒரு விடயத்தை கருத்தில் கொள்ளத் தவறக் கூடாது.

சில மாதங்களில் இந்த கொந்தளிப்பு பாரியளவில் இலங்கையினுடைய அரசியலை பெரி தாக குழப்பும். இன்று இருப்பது போல் இருக்காது. தற்செயலாக ஓரடி பின்னால் வைத்திருக்கும் சீனா ஈரடி முன்னால் வைக்க தான் போகிறது. அது ஒரு பக்கம் இருக்கட்டும். ஈழத்தமிழர்கள் போராடித் தான் ஆவார்கள். அது இன்னொரு பக்கம் இருக்கட்டும். ஈழத்தமிழர்கள் போராடினால், முன்பு போல ஈழத் தமிழர்களை இனிமேலும் கொல்ல இயலாது. வரலாற் றின் வளர்ச்சி இடம் கொடுக்காது. ஆனால் கலவரங்கள் வரலாம். அரசு நேரடியாக கொல்லுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாக இருக்கும் அது போராட்டத்தின் வெற்றியாக இருக்கும். எனவே இலங்கை அரசியலில் வரக் கூடிய காலங்களில் இன்று ஒரு சின்ன ஓய்வுநிலை ஏற்பட்டாலும் அது சிங்கள மக்களுக்கு தீர்வாக இருந்தாலும் அது தமிழ் மக்களுக்கு தீர்வாக இருக்க போவதில்லை.

தமிழ் மக்களும் தமிழ் தலைவர்களும் இந்த இடத்தில் வரலாற்று வாய்ப்பை கைவிட்டு விட்டார்கள். தனிப்பட்டவர்களை குறை சொல்லுவதோ குற்றம் சொல்லுவதோ இங்கு நோக்கம் இல்லை. அறிஞர்கள் கூட நிலைமைகளை சரியாக இனங்கண்டு தமிழ் மக்களுக்கு வழிகாட்ட தவறி விட்டார்கள் என்பதை யும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிங்கள இனவாத அரசை பாதுகாக்கும் பணியை தான் தமிழ் அரசியல் தலைவர்கள் பெருமளவில் செய்கிறார்கள். தமிழ் மக்களை அவர்கள் கைவிட்டு இருக்கிறார்கள். இந்த போராட்டத்தை முன்னெடுக்க தவறி உள்ளார்கள். இதனால் வரக்கூடிய சோகமான விடயம் நான்கு, ஐந்து வருடங்களின் பின்னர் கொடூரமான பக்கங்கள் வரும். ஈழத்தமிழர்களுடைய பிரச்சனை தீர்க்கப் படாத வகையில் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற இந்த காசு இலங்கையின் பொருளாதாரத்தை ஒரு போதும் தூக்கி நிறுத்த மாட்டாது. அது மீண்டும் கிளம்பும். எனவே கொந்தளிப்புக்கான ஒரு வாய்ப்பை மீண்டும் இந்த அரசியல் ஏற்படுத்தும். இலங்கை யில் தீர்க்கப்படாத பிரச்சனையின் பின்னணியில் இலங்கைத் தீவு இரண்டாக உடைவது இறுதியிலும் இறுதியான தீர்வாக போகும்.

இலங்கை தீவு இரண்டாக உடைவதற்கு உரிய போக்கை இந்த நெருக்கடி சற்று தாமதப்படுத்தி

(14 ஆம் பக்கம் பார்க்கவும்)

# ரணிலின் வருகையும் கோட்டா கோகம போராட்டமும்



– செல்வின் –

இன்று இலங்கை தீவில் நடப்பது என்ன? அதை நாம் எவ்வாறு பார்க்கின்றோம்? எவ்வாறு புரிந்து கொள்கின்றோம்? அதில் தமிழ் மக்களும் ஒரு பங்கு பற்றுனராக இருக்கின்றோமா? அல்லது வெறுமனே தூர நின்று பார்க்கின்றவர்களாக இருக்கின்றோமா? என்கின்ற பல கேள்விகள் இருக்கின்றன. முதலில் இங்கு நடப்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டி இருக்கின்றது. விலைவாசி உயர்வு, எரி பொருள் தட்டுப்பாடு, சமையல் வாயு தட்டுப்பாடு, உணவுப் பொருட்கள் இல்லாமை என்கின்ற காரணங் களினால் தான் ஆரம்பத்தில் “கோட்டா கோ ஹோம்” என்கின்ற போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத் தில் அந்த பெற்றோலியம், எரிவாயு மற்றும் மின்சார தடை போன்ற காரணங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட போது, அரசியல் பரிமாணம் கொண்டதாக இல்லாது, வெறுமனே சுயதேவையின் பற்றாக்குறையால் ஏற் பட்ட உந்துதலினால் உருவான ஒரு போராட்ட மாகத்தான் எல்லோராலும் அவதானிக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் வாரத்தின் பின் இலங்கையினு டைய சகல பல்கலைகழகங்களினுடைய மாணவர்கள் ஒன்றியம் (IUSF) போராட்டத்திற்குள் பிரவேசித்தது, அல்லது போராட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அது மக்கள் விடுதலை முன்னணி (JVP) அமைப்பினுடைய செல்வாக்குக்கு உட்பட்டது. அந்த அமைப்பு போராட்டத்தை அரசியல் பரிமாணம் கொண்டதாக மாற்றுவதற்கான முயற்சியில் கொஞ்சம் கொஞ்சமாக ஈடுபட்டது. என்றாலும், அரசியல் கட்சி சார்ந்ததாக இல்லாமல் அரசியல் மாற்றத்திற்கான ஒரு தளமாக அதை திறக்க வெளிக்கிட்டது. அதில் அந்த மாணவர்கள் அமைப்புகள், போராளிகள் எல்லோரும் சிறப்பாக வெற்றி பெற்றார்கள். அவர்கள் அந்தப் போராட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்த பின்பு தான் புதியபரிணாமம் எடுத்தது. அதன் பின்பு அந்த போராட்டத்திற்கு நிரம்ப பங்காளிகள் வந்தார்கள். போராட்ட முறைகள் எல்லாம் மாறின.

போராட்டத்துள் ஒழுங்கு கட்டுப்பாடு என்பன பேணப்பட்டன. போராட்டம் ஏன் எதற்கு என்பதற்கு எல்லாம் தெளிவான கருத்துரைகள் எல்லாம் கூறப்பட்டன. இருந்தும் அந்தப் போராட்டத்திற்கு பின் னால் இருக்கக்கூடிய தனிமனிதன் பற்றி, கட்சி பற்றி, குழு பற்றி, சித்தாந்த விடயம் பற்றி யாருக்குமே எதுவும் தெரியாது. அவர்களும் இந்தவிடயத்தில் நிதானமாகவே தொடர்ந்தும் பணியாற்றி வருகின் றார்கள். ஏனென்றால் இந்த அரசியல் கட்சிகளை தூரத்தில் வைத்துக் கொண்டு போராட்டத்தை நடத்த வேண்டும் என்பது அவர்களது தெளிவான பார்வையாக இருக்கின்றது.

அவர்கள் ஆரம்பத்தில் முன்வைத்தது இந்த கோட்டா கோ ஹோம் என்கின்ற விடயம். இந்த பிரச்சினைக்கெல்லாம் காரணம் ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச. எனவே அவர் இங்கிருந்து போக வேண்டும். அப்படி போவதன் மூலம் இந்த பிரச்சினை கள் எல்லாம் தீரும் என்கின்ற ஒரு ஒற்றை பரி ணாமத்தில் தான் இது ஆரம்பிக்கப்பட்டது. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக அது ராஜபக்ச குடும்பமே போக வேண்டும், அவர்களுடைய ஆட்சியே இருக் கக்கூடாது என்பதாக இருந்தது. பின்பு அடுத்த பரி ணாமமாக இவர்களுக்கு முட்டுக் கொடுக்கின்ற ஒரு வராக ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரி என் கின்ற பதவியினை ஏற்றுக் கொண்டு வருகின்ற போது இவரும் மிக முக்கியமான இலக்காக மாறினார். ரணில் விக்கிரமசிங்கவை “டீல் கோ கம” என்று போட்டுக்கொண்டார்கள். எல்லா விடயங்களிலும் ஏதோவொரு சூட்சும நாடகத்தை ஆடுகின்ற ஒருவரா கவே ரணில் விக்கிரமசிங்கவை இந்த மக்கள் கரு திக் கொண்டனர்.

எல்லா இடங்களிலும் தன்னுடைய நலன் களை பாதுகாத்துக் கொள்கின்ற ஓர் ஆளாக ரணில் விக்கிரமசிங்க பார்க்கப்பட்ட போது அவர்களுடைய கோட்டா கோ ஹோம், டீல் கோ கமவாக மாறி கொஞ்ச காலத்திற்குப் பின் இன்னுமொரு

பரிணாமம் எடுத்தது. அதாவது, இந்த நாட்டினுடைய அரசியல் கலாசாரம் முற்றாக மாற்றப்பட வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக மாறியது. அரசியல், கலாசாரம் மற்றும் பண்பாடு ஆகிய செயன்முறைகள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். அதற்கு இந்த நாடாளுமன்றமும் அரசியல் கட்டமைப் பும் எந்த விதத்திலும் பொருத்தமில்லை. எனவே அவர்கள் சொன்னார்கள், நாடாளுமன்றத்தில் இருக் கின்ற அத்தனை கள்ளர்களும் போக வேண்டும் என்று. 225 பேரும் ஏனையோரும் சேர்த்து எல்லோரும் போக வேண்டும் எனவே "ஹொரு கோ கம" என்றார் கள். திருடர்கள் போக வேண்டும் என்று சொன்னார் கள். கொஞ்சம் கொஞ்சமாக இவர்கள் அரசியல் பரிணாமத்தில் விரிவடைந்து அவர்களது சிந்தனையும் செயற்பாடும் விவாதங்களும் கருத்துரைப்புகளும் விரிவடைந்து வந்த போது அவர்களுக்குள் ஒரு மிகத்தெளிவான தேடல் ஒன்று உருவாக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசியல் கலாசாரம் மட்டுமல்ல, அரசியல் தலைமைகள், அரசியல் கட்ட மைப்பு, நாட்டின் அரசியலமைப்பு எல்லாமே மாற்றப் பட வேண்டும். வெறுமனே ஒரு தனி மனிதனை மாற்று வதன் மூலமோ ஒரு குழுவை மாற்றுவதன் மூலமோ இந்த நாட்டின் எதிர்காலத்தை கட்டமைக்க முடியாது என்கின்ற அளவுக்கு அவர்களது பார்வை விரி வடைந்தது.

அதன் பிறகு அவர்கள் நிறைய பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தார் கள். தமிழ்மக்கள் இந்த இடத்தில் ஏன் தூரத்தில் நிற் கின்றார்கள், அவர்களும் வரத்தானே வேண்டும் என்கின்ற கேள்வி அப்பொழுது அவர்களுக்கு எழுந்தது. தமிழ் மக்கள்சார் பல்வேறு தரப்பினருடன் கூட்டத்தை நடத்தினார்கள். அந்த இடத்தில் தமிழ் சிவில் அமைப்புகள் மற்றும் வேறும் பல அமைப்புகள் அவர்களுக்கு சில செய்திகளை தெளிவாக சொல்லி இருந்தார்கள்.

ஒரு தனிமனித ஆட்சியின் மாற்றத்தின் ஊடாக, அல்லது தனி குடும்பத்தின் அல்லது தனி அரசியல் கட்சியின் மாற்றத்தின் ஊடாக நாங்கள் இந்த நாட்டிற்கு விடிவு கிடைக்கும் என்று நம்ப வில்லை. ஒட்டுமொத்த அரசியல் கலாசார பண்பாடு மாற்றப்பட வேண்டும். நாட்டின் அரசியலமைப்பு மட்டுமல்ல, அத்துடன் அரசியல் மனோ நிலை மாற்றப் பட வேண்டும். எல்லா தேசிய இனங்களும் இத்தீவில் உரித்துடையவர்கள் என்பதை அனுமதிக்க வேண்டும். அந்த அங்கீகரிக்கின்ற மனோநிலையை நீங்கள் கொண்டு வருகின்ற போது நாங்களும் உங்களோடு இணைந்து கொள்வோம். அதுவரை உங்களை தூரத்தே நின்று பார்க்கின்றோம். ஆனால் இந்த அகிம்சை போராட்டத்தை, இலங்கையில் ஒரு மாற்றத் துக்காக நீங்கள் போராடுகின்ற போராட்டத்தை அங்கீகரித்து ஆதரிக்கின்றோம்.

அவர்கள் இவ் விடயங்களை சிறப்பாக உள்வாங்கி பல விடயங்களில் உடன்பட்டார்கள். இப்படி விரிவடைந்து வந்த போராட்டத்தால் ஒருகட டத்தில் இலங்கையினுடைய ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச சுயமாக நடமாட முடியாமல் முடங்கிப்போக வேண்டி வந்தது. அவர் எங்கே இருக்கின்றார் எனத் தெரியாத அளவுக்கு நிலைமை மாறியது. இவ்வாறு நிலைமைகள் எல்லாம் மாறி ஒரு கட்டத்தில் அவர் தன்னுடைய இருப்பை இங்கு தக்க வைக்க முடியாமல் நாட்டை விட்டு வெளியேறி ஒளிக்க வேண்டிய நிலை வந்தது .

1971 ஆம் ஆண்டு JVP ஆயுதப்போராட்டம் செய்த போது அப்பொழுதும் சிறீமாவோ அம்மை யார் அவர்கள் கப்பலில் இருந்ததாக ஒரு தகவல் இருக்கின்றது. அதே போல் தான் இம்முறை யும் கோத்தபாய தன்னுடைய மாளிகையை விட்டு ஓட வேண்டிவந்தது. அதற்கு முன்பு அவருடைய தமையன் மகிந்த ராஜபக்ஸ அவர்கள் கொழும்பை விட்டு ஓடவேண்டி நேர்ந்தபோது திருகோண மலை கடற்படை தளத்திற்குள் தான் ஓடி ஒளிந்து இருந்தார். எங்கு இருக்கின்றார் என்று தெரியாமலே ஒரு மாயமான் விளையாட்டுக்களை காட்டிக் கொண்டு இருந்து விட்டு, இறுதியாக தன்னுடைய நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை யும் சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டு, ராணுவ விமானம் ஒன்றை பெற்றுக் கொண்டு மாலைத்தீவில் இறங்கினார் கோத்தபாய. பின் அவர் சிங்கப்பூருக்கு பறந்தார்.

அவருக்கு இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்தது யார் காரணம் எனும் கேள்விக்கு பிரதமர் ரணில் அவர்களின் பெயர் தான் இங்கு முன்வைக்கப்

படுகிறது. மக்களால் விரட்டியடிக்கப்பட்டு எதிர்ப்பு களை தாங்க முடியாது ஜனாதிபதி தப்பித்து போன பின்னர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். ஒரு ஜனாதிபதியின் பொய்மையான அதிகாரத்தை இன்னுமொரு முறையில் பிரயோகிக்கின்ற ஒரு நயவஞ்சக செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்பு அவர் செய்த முதல் காரியம் போராட்டக்காரர்களை அடக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து இராணுவ அடக்குமுறைகளுக்கான அதிகாரங்களை வழங்கியமை. சிங்கள மக்கள் எடுத்துக்கொண்ட அகிம்சை போராட்டத்தை, போராளிகளை ஒரு சமூக விரோதிகளாகவும் குற்றவாளிகளாகவும் திருடர் களாகவும் பொதுச்சொத்துக்களை பாதிக்கின்ற நபர்களாகவும் உருவகம் காட்ட வெளிக்கிடுகின்றனர். ஆடி 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தை நோக்கிச் சென்ற கூட்டத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று போராட்டக்காரர்கள் சார்பில் ஒரு அறிக்கை தெளிவாக விடப்பட்டது. கோட்டா கோ கமவில் போராடுகின்றவர்களாகிய நாங்கள் இங்கிருந்து போராடுகின்றோம். நாடாளுமன்றத்திற்கு அருகா மையில் நடக்கின்ற போராட்டத்திற்கும் எமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அறிக்கை விட்டார்கள. ஆனால் இராணுவ தளபதியும் முக்கியமான படைத் தளபதிகளும் இராணுவத்தை தாக்கி அவர்களுடைய துப்பாக்கிகளையும் 60 பயன்படுத்தக்கூடிய தோட் டாக்களையும் இவர்கள் அபகரித்துச் சென்று விட்டார்கள் என்று சொல்லி இருக்கின்றனர். எந்த நேரமும் இந்த துப்பாக்கிகளையும் தோட்டாக் களையும் வைத்து எதுவும் செய்யலாம் என ஒரு விடயத்தை வெளியிட்டார்கள். அது உண்மையா, பொய்யா, நாடகமா திட்டமிட்டு செய்யப்படுகின்ற ஒரு சதி முயற்சிக்கான துவக்கமா என்பது யாருக்குமே புரியவில்லை. ஆனால் இது மிக ஆபத் தானது. போராளிகள் மிகத்தெளிவாகத்தான் பேசுகின்றார்கள். தாங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்ற ஜனாதிபதி மாளிகையையும் அவரது வீட்டையும் பிரதம அமைச்சரின் அலுவலகத் தையும் உடனடியாக கையளிக்க தயாராக இருக் கின்றோம் என்று அவர்கள் சொன்னார்கள். தாங்கள் கைப்பற்றிய இடங்களில் எந்தவொரு சேதாரத்தை யும் ஏற்படுத்தவில்லை, அவற்றை கண்ணியமாக பாது காப்பதாக சொன்னார்கள். ஆனால் அவர்கள் அவ் விடங்களை சேதப்படுத்தி விட்டதாக அரசதரப்பில் இருப்பவர்கள் குற்றம் சாட்டிக் கொண்டு இருக் கின்றார்கள்.

இவர்களின் நோக்கம், மக்கள் சார்ந்து போராட்ட எழுச்சி நடக்கும் போது அந்த போராட்டக் காரர்களை, பயங்கரவாதிகளாகவும் கொள்ளைக் காரர்களாகவும் சமூக விரோதிகளாகவும் அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்களாகவும் காட்டு வது தான். அப்படியானால் மக்களின் எழுச்சிக்கு பின்னால் உள்ள ஆன்மாவை யாரும் புரிந்து கொள்ளப் போவதில்லையா? எல்லோருமே என்ன செய்கின்றார்கள்? மிக அபத்தமாக நாடகம் ஆடு கின்றார்களா? இந்த போராட்டத்திற்கு ஊடாக ஏற்பட்டிருக்கின்ற சிங்கள மக்களின் மனநிலையை நாம் பார்த்தோமா?

இந்த தேசத்தை விடுதலைப் புலிகளின் பயங்கர வாதத்திலிருந்து மீட்டதாகச் சொல்லி பெருமைப் படுத்தி, மார்பிலே பதக்கம் சூட்டி அதை நினைவு நாளாக கொண்டாடி, அநுராதபுரவில் ருவென்வெலி சாயவிற்கு பக்கத்திலே மிகப்பெரிய தாதுகோபத்தை நிர்மாணித்து, சிங்கள பௌத்த தேசத்தின் தேசிய வாதத்தின் காவலர்கள் தாங்கள் தான் என்று சொன்ன வர்கள். அவர்களது கதைகளை எல்லாம் நம்பி அவர் களுடைய சாதனைகள் எல்லாம் சிங்கள மக்களுக்கு கிடைத்த மிகப்பெரும் கொடைகளாக, பெருமை களாக நம்பி அவர்களுக்கு தமது வாக்குகளை அள்ளிப் போட்ட 69 இலட்சம் மக்கள் இன்று மாறி இருக்கின்றார்கள். தங்களால் கதாநாயகன், பாதுகாப்பின் காவலன், சிங்கள பௌத்த மதத்தின் காவலன் என்றெல்லாம் சொல்லப்பட்டவர்கள் எல்லோரையும் தூக்கி எறிந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கேயோ ஒரு இடத்தில் மாறுதல் அல்லது வெடிப்பு வந்திருக்கின்றது.

முதலில் தமிழ் மக்கள் நாம் அதைப் புரிந்து கொள்ளத் தயாராக வேண்டும். சிங்கள மக்களின் சிந்தனையில் உடைவு ஏற்பட்டிருக்கின்றது. காலம் காலமாக அவர்களது மனதில் ஊறி இருந்த சிங்கள தேசியவாதத்தின் பெயரால் இந்த அரசியல்வாதிகள் ஆடிய கபட நாடகங்கள், தங்களது பதவிக்காகவும்

சொந்த இருப்புக்காகவும் தாங்கள் இந்த தேசத்தை சூறையாடுகின்ற விடயங்களை மறைப்பதற்காக செய்த விடயங்களே என்று சிங்கள மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். இது ஒரு மாபெரும் விடயம்.

இந்த உடைவின் ஊடாக தமிழ் மக்களாகிய நாம் எதனைக் கைப்பற்ற போகின்றோம்? எதை நாம் கையில் எடுத்து முன் நகரப்போகின்றோம் என்ற விடயத்தை நாங்கள் தெளிவாக பார்க்க வேண்டும். நாங்கள் இந்த போராட்டக்குழுக்களுடன் அல்லது இப்படியான புத்தாக்க சிந்தனை கொண்டவர்களுடன் எதனை பேசப்போகின்றோம் என்கின்ற விடயத்தைக் கூட நாங்கள் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற மதபீடங்களின் தலைவர்கள் ஒன்றாக ஒரு அறிக்கை விடுத்து இருக்கின்றார்கள். எங்களுடைய நாடாளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நாங்கள் எதனை எவ்வாறு செய்யப் போகின்றோம், எமது எதிர்காலம் எப்படி இருக்கப்போகின்றது, புதிய மாற்றங்களால் திறக்கப்படுகின்ற புதிய தளங்களில் கலந்துரையாடலில் ஈடுபடும் போது என்ன விடயங் களை நாங்கள் முன்வைக்கப் போகின்றோம் என்பது தொடர்பாக இந்த தமிழ்பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து மக்கள் முன் வந்து கலந்துரை யாட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளாக இந்த சமூகத்தில் செயற்படுகின்றவர்களும் வந்து கலந்து ரையாடி ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு கூறி அவர்களது வேண்டுகோள் அறிக்கை வந்துள்ளது. ஆனால் அதற்கு இன்னமும் யாராலும் பதிலளிக்கப்பட்டதாக தெரியவில்லை. நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு இந்தச் செய்தி போனதா என்பது கூடத் தெரிய வில்லை.

**"நாட்டின் அரசியலமைப்பு மட்டுமல்ல, அத்துடன் அரசியல் மனோ நிலை மாற்றப்பட வேண்டும். எல்லா தேசிய இனங்களும் இத்தீவில் உரித்துடைய வர்கள் என்பதை அனுமதிக்க வேண்டும்"**

சாதாரணமாக அரசியல் அக்கறை உள்ள பல பேர் கேட்கின்ற கேள்வி, எங்களுடைய பாராளு மன்ற அங்கத்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள், இவர்கள் ஏன் மௌனமாக இருக்கின்றார்கள் என்பது. எங்களுக்கு இந்த போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமாக மதிப்பிடத் தெரியவில்லையா? அல்லது வெறுமனே விழலுக்கிறைத்த நீர் போல இளைஞர்களும் போராளிகளும் செய்கின்றார்கள் எனவும், நாங்கள் இதில் அக்கறைப்படத் தேவை யில்லை, மீண்டும் எல்லாமே பழையபடி நடக்கும், நாங்கள் அதற்கு பிறகு மீண்டும் எங்களுடைய கோசங்களை உரக்கச் சொல்லிக் கொண்டு தமிழ் மக்களினுடைய வாக்குகளுக்காக வீதி வீதியாகச் சென்று அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் என்று நம்பிக்கொண்டு இருக்கின்றார்களா?

ஆனால் மதத்தலைவர்களின் அந்த அறிக்கை யில் இன்னுமொரு வாசகம் வெளி வந்தது. அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள், தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு எதிராக அந்த இளைஞர்களின் நெற்றிக் கண் திறக்கப்பட்டது போன்று தமிழர் பிரதேசங் களிலும் நெற்றிக்கண்கள் திறக்கப்படுவதற்கு நீண்ட காலம் ஆகாது. எனவே நீங்கள் அதற்கு முன்பாகவே வெளியில் வாருங்கள், கருத்துரையுங்கள். ஏனென் றால் தவிர்க்க முடியாமல் நீங்கள் தான் இந்த மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருக்கிறீர்கள்.

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

இருந்தாலும் அதை முடித்து வைக்க மாட்டார்கள். இந்த நெருக்கடியிலிருந்து அடுத்த கட்டமாக அது வெடித்து வெளியேறி வரும். இலங்கையின் பிரச்சனைக்கு தீர்வு எந்தவொரு அரசாலும் ஒரு போதும் காண முடியாது. நாடு இரண்டாக உடைவது என்பதின் மூலம் மட்டும் தான் இலங்கைக்கு தீர்வு வரும். அது தான் இந்த பிராந்தியத்தில் சமாதானத்தை கொண்டு வரும். உடையும் என்பது என்னுடைய உளவியல் ரீதியான முடிவு கிடையாது அறிவியல் ரீதியான முடிவை தான் சொல்கிறேன். நாம் இலங்கையில் ஒன்றுபட்ட மக்களாக இருப்பது எனக்கு மிகுந்த விருப்பம் . ஆனால் அதற்கு இட மில்லை எனும் போது நாங்கள் எப்படி ஒன்றுபட முடியும்? அந்தவகையில் இலங்கை இரண்டாக உடைவதற்கான ஒரு வரலாற்றுப் போக்கை இன்றைய சின்ன தீர்வு ஏற்படுத்த போவதில்லை. மாறாக இது அடுத்த கட்டத்திற்கு போகும் என்பதையே உய்த்துணரக் கூடியதாக இருக்கிறது.

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

கோருகிறது. மக்கள் வழங்கிய ஆணைக்கு பிரதிநிதிகள் விசுவாசமாக இருப்பதற்கு கோருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை திரும்ப அழைக்கவும், அவர்கள் சந்தர்ப்பவாத ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமல் அரசியல் செய்யவும் கோருகிறது. இத்தகைய முழக்கங்களும் கோரிக்கைகளும் இளைஞர்களின் இலட்சிய உணர்வைப் பிரதிபலிப்பதில் ஆச்சரியமில்லை.

**ஜனநாயக அவா**

இந்தக் கோசங்கள் அனைத்தும், படித்த தொழில் வல்லுநர்களிலிருந்து சாதாரண ஆண்கள், பெண்கள் வரை எளிதில் எதிரொலித்தது. ஏனெனில் அவை தற்போதுள்ள அமைப்பு பற்றி ஒரு சக்தி வாய்ந்த விமர்சனத்தையும் ஒரு சிறந்த அரசியல் ஒழுங்கிற்கான புதிய நம்பிக்கையையும் உள்ளடக்கி உள்ளன. ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக அரசியல் உயரடுக்கினரால் கைப்பற்றப்பட்டு, சிதைக்கப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்பட்ட ஒரு அமைப்பில் வாழ்ந்த எல்லோரதும் சொந்த அனுபவங்களிலிருந்து இவை வந்துள்ளன. அதனால், அந்த விமர்சனமும் நம்பிக்கையும் அனைவராலும் பகிரப்பட்டது. அதனால் தான், பங்குனி மாத இறுதியில் தொடங்கிய மக்கள் இயக்கம், அதிகளவு ஜனநாயக உள்ளடக்கத்தையும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றலையும் கொண்டிருந்தது. இது மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மக்கள் இயக்கம். கடுமையாக பாதிக்கப்பட்ட சமூகத்தில் சாதாரண மக்களின் பங்கை மீட்டெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம்.

இலங்கையின் சாதாரண மக்களின் ஏக்கங்களைப் பிரிதபலித்தமையே அரகலயவிற்கு ஒரு பெரிய அரசியல் முக்கியத்துவத்தை சேர்த்துள்ளது. அதனாற்தான் இது ஒரு புதிய அரசியல் தொடக்கத்திற்கான அடையாளத்தையும் கொண்டுள்ளது.

அரகலயவின் முக்கிய கோரிக்கைகள் மற்றும் முழக்கங்களின் கருத்தியல் அடிப்படைகள், அவற்றின் தாக்கங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, மூன்று மிக முக்கியமான விடயங்கள் வெளிப்படுகின்றன. முதலாவதாக, அவை தற்போதுள்ள பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நடைமுறைகளையும் ஊழலையும் நிராகரிக்கின்றன. இரண்டாவதாக, தாராளவாத, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை விமர்சிப்பதுடன் அக்கருத்துகள் நின்று விடவில்லை. மாறாக, இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பங்கேற்பு, நேரடியான குடியரசு ஜனநாயகக் கொள்கைகள், நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை நாடாளுமன்ற ஜனநாயகத்துடன் ஒருங்கிணைப்பதற்கான ஒரு கட்டமைப்பை அவை முன்மொழிகின்றன.

மூன்றாவதாக, நவதாராளமய ஜனநாயகம், உள்நாட்டு சர்வாதிகாரம் ஆகியவற்றால் பிறந்த இலங்கையின் ஜனநாயக நெருக்கடிக்கையை தீர்ப்பதற்காக புதிய யோசனைகளை கொண்டிருக்கின்றன.

தாராளவாத, நாடாளுமன்ற ஜனநாயகத்தை அதன் வழமையான வடிவத்தில் மீண்டும் கொண்டு வருவதன் மூலம் மட்டும் இலங்கையின் ஜனநாயகத்தின் நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என்பதை வலியுறுத்த வேண்டும். அரசியல் உயரடுக்குகள் மற்றும் அவர்களது அரசியல் கட்சிகள் சாராமல் குடிமக்களால் உருவாக்கப்படக் கூடிய 'மக்கள் ஜனநாயகத்திற்கு' சாதகமாக பதிலளிக்கக்கூடிய ஜனநாயகத்தை ஆழமாக்குவதற்கான உத்திகள் இதற்குத் தேவை. ஜனநாயகத்தை ஆழப்படுத்துவது என்பது இறையாண்மையுள்ள மக்களுக்கும் அவர்களின் பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கும் இடையே உடைந்து போன தொடர்பை குடியரசு மற்றும் நேரடி ஜனநாயக முறைகள் மூலம் மீள உருவாக்குவது. ஒரு தீவிர ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலை அது வேண்டி நிற்கிறது.

இருப்பினும், இந்தப் பணியில் உள்ளார்ந்த ஒரு பெரிய சவால் உள்ளது. இது பின்வருமாறு வகுக்கப்படலாம்: அரகலயவின் ஊடாக மக்கள் வெளிப்படுத்திய அரசியல் நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை உள்ளடக்க இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கட்டமைப்பு இடமளிக்குமா?

**அரசியலமைப்புச் சிக்கல்**

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு ஜனநாயகமானது அல்ல. எதேச்சதிகார சர்வாதிகாரமும் பலவீனமான நாடாளுமன்றமும் இணைந்த ஒரு கலப்பு கட்டமைப்பு. இது எதேச்சதிகார சர்வாதிகாரத்தின் அடக்கு முறைக்குள்ளேயே இருக்கும் ஒரு விசித்திரமான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. பல

வீனமான மற்றும் பெயரளவிலான இரண்டு குடியரசுக் கூறுகளும் உள்ளன. மக்களின் இறையாண்மையைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய குடியரசின் தலை வரை மக்கள் நேரடி வாக்களிப்பில் தேர்ந்தெடுப்பதற் கான வசதி மற்றும் மக்களுக்கு நேரடி சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்குவதற்கான சர்வசன வாக் கெடுப்பு முறை என்பன உள்ளன. எவ்வாறாயினும், இந்த இரண்டு போலி குடியரசு வழிமுறைகளும், பிரதிநிதித்துவம் மற்றும் மக்கள் ஜனநாயகம் ஆகிய வற்றை வீழ்ச்சியடைய வைப்பதற்கு சர்வாதிகாரத் தால் கருவியாக பயன்படுத்தப்படும் நோக்கங்களை கொண்டன. உண்மையில் அவ்வாறே அவை பயன்படுத்தவும் படுகின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள 20வது திருத்தம்தான் 1978 அரசியலமைப்பிற்கு ஒரு விரி வான சர்வாதிகாரப் பண்பை வழங்கியது. இன்று மக்களின் எதிர்ப்பு இயக்கம் வெளிப்படுத்தும் அரசி யல் சீற்றம் 1978 அரசியலமைப்பு மற்றும் அதன் 20வது திருத்தம் ஆகிய இரண்டிற்கும் எதிரானது மட்டும் அல்ல. இலங்கையின் ஜனநாயக அரசிய லமைப்புச் சிந்தனையின் கருத்தியல் கட்டமைப்பின் எல்லையை விரிவுபடுத்துவதற்கான அழைப்பாகவும் இது அமைந்துள்ளது.

அப்படியானால், மக்கள் ஜனநாயகம் மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகம் இரண்டையும் ஒருங்கி ணைக்கும் வகையில் வடிவமைக்கப்படும் ஒரு முற்றிலும் புதிய அரசியலமைப்பு வேண்டும் என்ற அரகலயவின் கோரிக்கையை அரசாங்கம், எதிர்க் கட்சிகள் மற்றும் ஆளும் வர்க்கம் புறக்கணிக்க முடியுமா? 19வது திருத்தத்தை அல்லது அதன் நீர்த்துப் போன வடிவத்தை நிறைவேற்றுவது அரசியலமைப் பையும் ஒட்டு மொத்த அரசியல் ஒழுங்கையும் மறு ஜனநாயகப்படுத்துவதற்கான மக்களின் எதிர் பார்ப்புகளைப் பூர்த்தி செய்யுமா? வேறு வார்த்தை களில் கூறுவதானால், பிரதிநிதித்துவ ஜனநாயகத் தின் வரம்புகளுக்கு அப்பால் செல்ல வேண்டும் என்ற அரகலயவின் கோரிக்கைக்கு மேலாதிக்க, காலாவதி யான, குறுகிய தாராளவாத அரசியலமைப்பு கட்ட மைப்பிற்குள் இடமளிக்க முடியுமா? இந்தக் கேள்வி களுக்கான தெளிவான பதில் ‘இல்லை’ என்பதுதான்.

இதுதான் இங்கு எழுந்துள்ள அரசியலமைப் புச் சிக்கல். இது உண்மையிலேயே ஆழமான ஜன நாயக சீர்திருத்தங்கள் வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கும், ஆளும் வர்க்கம் மற்றும் தாராள வாத, பிரதிநிதித்துவ, நாடாளுமன்ற ஜனநாயகத் தின் வரையறுக்கப்பட்ட சட்டத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்கின்ற கல்விசார் அரசியலமைப்பு வாதிகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு. FSP இனால் பிரேரிக்கப்படும் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் மக்கள் பேரவை முன்மொழி வுக்கு இன்று வெளிப்படுத்தப்படும் பலத்த எதிர்ப்பு களின் மூலம் இந்த முரண்பாடு தற்போது வெளிப் படுத்தப்பட்டுள்ளது. மக்களின் தேவைகள் மற்றும் அவர்களின் நிகழ்ச்சி நிரல்களை நாடாளுமன்றத்தின் கொள்கை மற்றும் சட்டவாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டு வருவதுதான் இந்த மக்கள் பேரவையின் முதன்மையான நோக்கம். அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளால் ஆன நாடாளுமன்றத்தை கண்காணிப் பதும் இதன் நோக்கம்.

இந்த முன்மொழிவுகளின் விவரங்களை FSP விவரிக்கவில்லை. இருந்தாலும், இது ஒரு கருத்தி யல் முன்மொழிவாக முன்வைக்கப்படுகிறது. இது பற்றிய விவரங்களை அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள் மற்றும் அரகலய இயக்கத்தினரிடையே கலந்துரையாடல் மூலம் உருவாக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அதேவேளை, இலங்கையில் தாராளவாத அரசியலமைப்புச் சிந்தனையை நெகிழ் வுடையதாகவும், புதுப்பிக்கப்பட்டதாகவும், மாற்றங் களை உள்வாங்கக் கூடியதாகவும் மாற்ற வேண்டிய தேவை முக்கியமானது. ஜனநாயகத்தை ஆழப்படுத் தும் நோக்குடன், குடியரசுவாத, சமூக–ஜனநாயக மற்றும் நேரடி ஜனநாயக முன்மொழிவுகள் என்ப வற்றை கலந்துரையாடுவதற்கு இந்த நெகிழ்வுத் தன்மை குறிப்பாக தேவைப்படுகிறது. அப்படி இருந் தால் மட்டுமே அவற்றை செம்மைப்படுத்தி புதிய அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ள முடியும்.

அரகலயவால் வெளிப்பட்டுள்ள மக்களின் உள்ளார்ந்த ஜனநாயக எழுச்சி மற்றும் அரசியல மைப்பு சிந்தனை என்பவற்றால் நாட்டின் அரசியல மைப்பு பயனடைவதற்கான ஒரே வழி இதுதான். இலங்கையின் ஜனநாயகத்தை ஆழப்படுத்துவதற்கான அரசியல் சிந்தனைகள் மக்களின் போராட்டங்களில் பொதிந்துள்ளன என்பதை அரகலயவின் சீர்திருத்த முன்மொழிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இதனை

ஒப்புக்கொள்வது முக்கியம். நாடு பாரிய, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடியில் இருக்கும் இந்த பொருத்தமான நேரத்தில், கடந்த மூன்று மாதங்களில் இந்தச் சிந்தனைகள் தம்மை வெளிப் படுத்தியுள்ளன. நாட்டின் சாதாரண குடிமக்கள், நடுத்தர மற்றும் ஏழ்மையான சமூக வர்க்கங்களின் இளைஞர்களின் உள்ளார்ந்த அனுபவங்களில் இருந்து முளைத்த இந்த சிந்தனையின் மதிப்பையும் சக்தியையும் நமது அரசியல் மற்றும் ஆளும் வர்க்கத் தினர் புரிந்து கொள்ளத் தவறினால் அது ஒரு சோகமான தவறு.

உண்மையில் இந்த அரசியலமைப்புச் சிக்கலைத் தீர்க்க வழிகள் உள்ளன. அவற்றுள் மிகவும் செயற்திறனுடைய வழி இந்த இரண்டு இழைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மத்தியில் ஒரு கலந்துரையாடலை ஆரம்பிப்பதே. இலங்கையின் ஜனநாயகத்தை மறுவடிவமைக்கும் ஒரு புதிய திட்டத் தில் ஒவ்வொரு இழையும் மற்றைய இழையை எவ்வாறு வளப்படுத்த முடியும் என்பதைக் கண்டறிய இது தேவை. ராஜபக்சவுக்குப் பிந்தைய சகாப்தத்தை இலங்கையின் அரசியலில் ஆரம்பிப்பதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு இருக்கும் நெருக்கடிகள் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. இன்று உலகில் உள்ள அனைத்து தாராளவாத ஜனநாய கங்களும் பிரதிநிதித்துவ ஜனநாயகங்களும் அந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. ஒவ்வொரு நாட்டிற்கும் சில கூறுகள் பிரத்தியேகமானதாக இருக்கலாம். ஒரு நாட்டின் சொந்த அரசியல் வரலாறு, பல்வேறு சமூக வர்க்கத்தினரிடையே நடக்கும் அதிகாரத்திற்கான போராட்டங்களின் தன்மை, தாழ்த் தப்பட்ட வகுப்பினர் அதிகாரங்களை அடையாமல் தடுத்து வைப்பதற்கான உயர் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரல்கள், அதிகார நிறுவனங்கள், செல்வம் மற்றும் அரசியல் அதிகாரத்தை மறுபகிர்வு செய்வதற்கான தாழ்த்தப்பட்ட சமூகங்களின் அழுத்தங்கள் என்பவை நாட்டுக்கு நாடு வேறுபடும். இலங்கையைப் பொறுத்த வரை, தற்போதைய நெருக்கடியானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் உள்ள மூன்று பிரச்சனைகளை எடுத் துக்காட்டுகிறது. ஒன்று, நிறைவேற்று அதிகாரத்துவத் துவத்தையும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் நிறைவேற்று அதிகாரத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இணைத்தல். இரண்டாவது, நாடாளுமன்றம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பது. மூன்றாவது, நாடாளுமன்றத் தின் தரம் மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கத்தில் மையமாக இருப்பதில் அதன் தோல்வி. இந்தப் பின் னணியில்தான் இலங்கையின் ஜனநாயகத்தை மீட் டெடுக்க விரும்பும் அரகலயவிற்கு இன்றைய 'அமைப்பு' எவ்வாறு பதிலளிக்க முடியும் என்ற புதிய கேள்வி ஒன்று எழுந்துள்ளது.

### இளைஞர்களும் ஜனநாயகமும்

இலங்கையின் தற்போதைய நெருக்கடியானது 1970 களின் முற்பகுதியில் இருந்து பல தடவைகள் திரும்பத் திரும்ப நாம் கண்ட மோசமான சிக்கலை மீண்டும் உருவாக்கியுள்ளது. இளைஞர்கள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் ஒழுங்கின் அமைப்பு ரீதியான தவறுகளை முன்னிலைப்படுத்திய போதெல் லாம், ஆளும் வர்க்கம் அவர்களின் குரல்களை கேட்பதற்கு இயலாமல் இருக்கின்றது. அர்த்தமுள்ள சீர்திருத்தங்களை வழங்க முடியாமல் இருக்கின்றது.

கடந்த காலங்களில், மாற்றத்திற்கான இளை ஞர்களின் அழுத்தம் கிளர்ச்சி மற்றும் வன்முறை வடிவத்தில் வந்ததால், மாற்றத்திற்கான கூக்குரலை சிறுமைப்படுத்தவும் புறக்கணிக்கவும் வன்முறை ஒரு சாக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதற்கு நேர்மாறாக, 2022 இன் மாற்றத்திற்கான அழுத்தம் வன்முறை யற்றது. மேலும், மாற்றத்திற்கான இயக்கத்தின் அடித் தளங்கள் இளைஞர்களை மட்டும் கொண்டிராமல், குடிமக்களின் பரந்த பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் கணிசமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஆளும் வர்க்கத்தால் ஊழல் நிறைந்த பிரதி நிதித்துவ ஜனநாயகத்தின் ஊடாக நாடு ஆளப்படுவது மாற்றப்பட வேண்டும் என்று சமூகம் முழுவதுமே அழைப்பு விடுக்கிறது. இதை புரிந்து கொள்ளும் அளவுக்கு தற்பொழுதுள்ள 'அமைப்பு' நெகிழ்வாக இருக்க முடியுமா? அது உருவாக்கிய கலாச்சாரம், நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளைச் சுத்தப் படுத்த ஒரு பெரிய திட்டம் இருக்க வேண்டாமா? மக்கள் போராட்டத்தில் இருந்து வெளிவரும் சில புதிய முன்மொழிவுகள் வெளிப்படையாகவே வழக் கத்திற்கு மாறானவை. அவை இலங்கையின் பிரதான அரசியல் உரையாடலில் பரிச்சயமற்றவை. தாராள வாத அரசியலமைப்பு கோட்பாடு பற்றிய வழக்கமான

பாடப்புத்தகங்களில் அவை இல்லை என்பதால் அவற்றை நிராகரிக்க முடியாது.

**'மக்கள் பேரவை'**

FSP மற்றும் இன்னும் சில குழுக்களால் முன்வைக்கப்பட்ட தேசிய மட்டத்தில் ஒரு மக்கள் பேரவை யோசனையை பார்ப்போம். இலங்கையின் தற்போதைய சூழலுக்கு அதன் ஜனநாயகத் தேவை, மதிப்பு மற்றும் பொருத்தம் என்பவற்றைப் போதுமானளவுக்கு ஆராயாமல் அது நிராகரிக்கப் படக்கூடாது. நாடாளுமன்றம் ஒரு நிறுவனமாக செயற்பட ஒரு பொறிமுறை இல்லாமல் இருப்பது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மக்களுக்காக சட்டம் இயற்ற முடியாமல் இருப்பது, அவர்களின் அதிகாரத்துக்கு ஆதாரமாக இருக்கின்ற இறையாண்மையுள்ள மக்களுக்கு பொறுப்புக் கூற முடியாமல் இருப்பது போன்ற தற்போதுள்ள நாடாளுமன்ற அரசாங்க முறைமையின் முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த மக்கள் பேரவை முன்மொழியப்பட்டுள்ளது. மக்களுக்கு பொறுப்புக்கூறலுக்கான ஒரே சந்தர்ப்பம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமே. இது உலகம் முழுவதிலும் உள்ள நாடாளுமன்ற முறையின் பொதுவான பலவீனம். குடியரசுக் கொள்கை உள்ளவர்கள் மற்றும் சோசலிசக் கொள்கை உள்ளவர்கள் நாடாளுமன்ற ஜனநாயகம் மீது பெரும்பாலும் வைக்கும் விமர்சனம் இது.

அதேவேளை, இலங்கை உட்பட எல்லா இடங்களிலும், மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்து, அவர்களின் விருப்பங்களைப் பொருட்படுத்தாமல் நாடாளுமன்றத்திற்குள் அரசியல் செய்வது வழக்கமாகி விட்டது. இதனைத்தான் 'ஒப்பந்த அரசியல்' மற்றும் 'அதிகாரப் போட்டி அரசியல்' என்று அரகலயவில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். 'ஊழல்காரர்களின் கூட்டுகளை உருவாக்குவது, உடைப்பது மற்றும் மீண்டும் உருவாக்குவது என நாடாளுமன்ற அரசியல் தரம் குறைந்துள்ளது என்பதுதான் மக்களின் பார்வையாக இருக்கிறது. இதுதான் இலங்கை நாடாளுமன்றமும், அதன் உறுப்பினர்களும் பல்வேறு கண்டனங்களுக்கும் சந்தேகங்களுக்கும் ஆளாகுவதற்கு ஒரு முக்கிய காரணம். அரசாங்கத்தின் மிக உயர்ந்த நிறுவனமான நாடாளுமன்றம் அதன் நம்பகத் தன்மையையும் சட்டபூர்வமான தன்மையையும் இழந்துவிட்டது.

வழக்கம் போல், அரசியல் வர்க்கம் இலங்கையில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழிவான நிலைக்கு தீர்வு காண எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுப்பதில் குறிப்பிட்ட அக்கறை காட்டவில்லை. இந்தப் பின்னணியிற்தான் மக்கள் வழங்கிய ஆணையின்படி நாடாளுமன்றம் மற்றும் அதன் உறுப்பினர்கள் செயல்படுவதை உறுதிசெய்யும் கண்காணிப்புப் பாத்திரம் கொண்ட மக்கள் பேரவை யோசனை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அரசியல் வர்க்கத்தின் புலமைசார் உறுப்பினர்கள் மற்றும் அரசியலமைப்பு வல்லுநர்கள் செய்ய வேண்டியது இந்த யோசனையை நிராகரிக்காமல், அதைச் செம்மைப்படுத்தி, அதன் ஆதரவாளர்களுடன் உரையாடி இனி உருவாகும் ஜனநாயக அரசியலமைப்பில் அதை உள்ளடக்க வேண்டும்.

**கருத்தியல் வறுமையை வெல்வது**

இது இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தவாதிகள் ஒரு சுயவிமர்சனத்தை செய்ய வேண்டும் என்று கோருகிறது. இலங்கையின் அரசியலமைப்புச் சிந்தனையிலும் நடைமுறையிலும் ஒரு கருத்தியல் வறுமை இருக்கின்றது என்பதை ஒத்துக் கொண்டு அதனை வெல்லும் நேரம் வந்துவிட்டது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். அது மிகவும் பலனளிக்கும். 1978 அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து 20வது திருத்தம் வரை, மற்றும் அண்மையில் கைவிடப்பட்ட 21வது மற்றும் 22வது திருத்தங்கள் வரை நாம் கண்ட அனைத்து அரசியலமைப்பு நெருக்கடிகளும் இந்த பரந்த ஜனநாயக நெருக்கடியின் விளைவுகள் தான்.

அப்படி இருந்தும், நமது அரசியல் மற்றும் அரசியலமைப்பு அறிவுசார் வர்க்கங்கள் இரண்டும் இந்த நெருக்கடிகளை எமக்கே உரிய வகையில் ஜனநாயக அரசியலமைப்பு சிந்தனை ஒன்றைக் கட்டமைக்க பயன்படுத்துவதை தவிர்த்தே வந்திருக்கிறார்கள். நாம் இன்னும் துடிப்பான விமர்சன ரீதியான அரசியலமைப்புச் சிந்தனையை கொண்டிருக்காமல் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாக இருக்கலாம். அதாவது, நாம் அரசியலமைப்பு சட்ட நுட்பங்களை பற்றி விரிவாகக் கையாளத் தெரிந்தி

ருப்பவர்களாக இருந்த போதும் அதன் நெறிமுறை, கருத்தியல் மற்றும் தத்துவ அடிப்படைகளை கையாள தெரியாதவர்களாக இருக்கிறோம்.

இறுதியாக, இன்றைய தருணத்தின் ஒரு குறிப் பிட்ட அம்சம், மக்களின் எதிர்ப்பு, அந்த எதிர்ப்பு இயக்கத்தின் முழக்கங்கள் மற்றும் கோரிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உள்ளார்ந்த ஜனநாயக அரசியல் சிந்தனையின் தோற்றம் ஆகும். மக்கள் பேரவைகள், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி களை திருப்பி அழைக்கும் உரிமை, நேரடி ஜனநாயக வழிமுறைகள், உயர்வர்க்கத்தினர் கொண்டிருக்கும் அதிகாரத்தை கண்காணிப்பதற்கான மக்கள் இயக் கங்கள், கொள்கை வகுப்பு விவாதங்களில் பங்கு பற்றக் கூடிய மக்கள் அமைப்புகள் என்பவை இந்த சிந்தனையில் அடங்கியுள்ளன. அது பிரதிநிதித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நீண்டகால குறைபாடு களை நிவர்த்தி செய்ய முயல்கிறது. கடந்த நான்கு மாதங்களில் மக்கள் இயக்கத்தின் தலையீடுகள் நமது அரசியலில் முற்றிலும் புதிய பரிமாணத்தைச் சேர்த் துள்ளன. இந்த மாற்றம் அரசியலில் ஒரு குடிமகனின் பாத்திரத்தை ஒரு பார்வையாளன் என்பதிலிருந்து விழிப்புணர்வுள்ள ஒரு பங்காளியாக மாற்றியுள்ளது. இந்த மாற்றம் ஜனநாயகத்தையும் எமது குடியரசின் அரசியலமைப்பு அடித்தளங்களையும் மறுவடிவமைக் கவும் ஆழப்படுத்தவும் ஒரு புதிய அறிவு மற்றும் அரசியல் சக்தியை வழங்கியுள்ளது.

இப்போது எமக்குக் கிடைத்திருப்பது, நாம் பயன்படுத்த வேண்டிய ஒரு வரலாற்றுத் தருணம். எவ்வகையான ஜனநாயக அரசியலமைப்பு, எவ்வ கையான ஜனநாயக அரசியல் ஒழுங்கு என்பவற்றை மக்கள் புதிதாக உருவாக்க வேண்டும் என்ற கேள் விகளுக்கான பதிலை பெற்றுக் கொள்ள இந்த தருணத்தை நாம் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:**

தாராளவாத கொள்கை உடைய ரணில் விக்கிர மசிங்க சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தாராளவாத ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அரசியற் செயற்பாட்டாளர் அரகலய போராட்டத்தி லிருந்து மெல்ல கழன்று போக ஆரம்பித்துள்ளார்கள். அவர்களில் சிலர் அரகலயவை எதிர்க்கவும் தொடங்கி உள்ளனர். அரகலயவில் எஞ்சிநிற்பவர்கள் தீவிர சோசலிசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் மட்டுமே. இந்தச் சூழலில் கட்டுரையாளர் பேராசிரி யர் ஜெயதேவ உயங்கொடவால் ஆதரிக்கப்பட்ட இரு சிந்தனைப் போக்குகளுக்கும் இடையேயான கலந்துரையாடல் நடப்பதற்கு சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு.

**வாசகர்களே!**

*நிமிர்வு இதழை* **www.nimirvu.org** *இணையமூடாகவும் சமூக ஊடகப் பக்கங்களான* **facebook.com/nimirvu** *என்ற முகநூல் ஊடாகவும்* **youtube.com** *இல்* **nimirvu** *என்று தேடுவதனூடகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.*

*இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம்* **(noolaham.org)** *இணையத்தினூடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல்* **(pdf)** *வடிவில் வாசிக்க முடியும்.*

# பிணைமுறிக் கடன்களின் மீள் கட்டமைப்பு - பகுதி 2

## இதுவரைகாலமும் இலங்கைக்கு IMF அளித்த உதவித் தொகை (ஆயிரம் SDR களில்)

| Facility | Date of Arrangement | Expiration Date 4/ | Amount Agreed | Amount Drawn | Amount Outstanding |
|---|---|---|---|---|---|
| Extended Fund Facility | Jun 03, 2016 | Jun 02, 2019 | 1,070,780 | 715,230 | 715,230 |
| Standby Arrangement | Jul 24, 2009 | Jul 23, 2012 | 1,653,600 | 1,653,600 | 0 |
| Extended Fund Facility | Apr 18, 2003 | Apr 17, 2006 | 144,400 | 20,670 | 0 |
| Extended Credit Facility | Apr 18, 2003 | Apr 17, 2006 | 269,000 | 38,390 | 0 |
| Standby Arrangement | Apr 20, 2001 | Sep 19, 2002 | 200,000 | 200,000 | 0 |
| Extended Credit Facility | Sep 13, 1991 | Jul 31, 1995 | 336,000 | 280,000 | 0 |
| Structural Adjustment Facility Commitment | Mar 09, 1988 | Mar 08, 1991 | 156,170 | 156,170 | 0 |
| Standby Arrangement | Sep 14, 1983 | Jul 31, 1984 | 100,000 | 50,000 | 0 |
| Extended Fund Facility | Jan 01, 1979 | Dec 31, 1981 | 260,300 | 260,300 | 0 |
| Standby Arrangement | Dec 02, 1977 | Dec 01, 1978 | 93,000 | 93,000 | 0 |
| Standby Arrangement | Apr 30, 1974 | Apr 29, 1975 | 24,500 | 7,000 | 0 |
| Standby Arrangement | Mar 18, 1971 | Mar 17, 1972 | 24,500 | 24,500 | 0 |
| Standby Arrangement | Aug 12, 1969 | Aug 11, 1970 | 19,500 | 19,500 | 0 |
| Standby Arrangement | May 06, 1968 | May 05, 1969 | 19,500 | 19,500 | 0 |
| Standby Arrangement | Jun 15, 1966 | Jun 14, 1967 | 25,000 | 25,000 | 0 |
| Standby Arrangement | Jun 15, 1965 | Jun 14, 1966 | 30,000 | 22,500 | 0 |
| | | Total | 4,426,250 | 3,585,360 | 715,230 |

நன்றி: IMF இணையத்தளம் (https://www.imf.org/external/np/fin/tad/extarr2.aspx?memberKey1=895&date1key=2018-09-30)

-தமிழாக்கம் – நிமிர்வு-

**குறிப்பு:**

**SDR எனப்படுவது 1969 ஆம் ஆண்டு IMF இன் அங்கத்துவ நாடுகளின் உத்தியோக சொத்துக் கையிருப்புகளுக்கு மேலதிகமாக IMF ஆல் உருவாக்கப்பட்ட சர்வதேச சொத்துக் கையிருப்பின் அலகு. இதுவரை 660.7 பில்லியன் SDRகள் IMF இனால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2021 ஆவணி 2 ஆம் திகதி ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய ஒதுக்கீடாகிய 456 பில்லியன் SDR உம் அடக்கம். இந்த ஒதுக்கீடு உலக நாடுகள் கோவிட் – 19 பெருந்தொற்றுக்கு பின்னராக ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க உதவுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. SDR இன் பெறுமதி அமெரிக்க டாலர், யூரோ, றெமிம்பி (சீனா), யென் (ஜப்பான்), பவுண்ட்ஸ் (இங்கிலாந்து) என்பவற்றை அடிப்படையாக கொண்டது.**

ஒரு நாட்டின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் நடக்கும் பேச்சுவார்த்தைகளை பற்றி லீ புக்ஹைட் சொன்னவற்றின் ஒரு பகுதியை சென்ற இதழில் பார்த்தோம். அதின் இரண்டாம் பகுதியை இங்கு தருகிறோம்.

கடன் வழங்கும் வணிகர்களின் பார்வையில் IMF ஒரு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பண முறிச் சந்தையில் பல்லாயிரக்கணக்கான முதலீட்டார்கள் இருக்கிறார்கள். அவர்களில் கணிசமான பகுதியினர் ருரிடானியா குடியரசின் நிலையை ஆய்வு செய்து, அதற்கு கடன் மறுசீரமைப்பு அவசியமா, அல்லது அந்த கடன் மறுசீரமைப்பு ருரிட்டானியாவின் தேவைகளை பூர்த்தி செய்யுமா என்பது பற்றிய பார்வையை அவர்களால் உருவாக்க முடியும் என்று நம்புவது முட்டாள்தனம். ஆனால் வணிக கடன் வழங்குனர் ஒரு விடயத்தையிட்டு மிகவும் பயப்படுவர். உள்ளூர்

அரசியல்வாதிகள் தமது அவமானகரமான வெட்கப் படக்கூடிய பொருளாதார சீர்கேட்டு வரலாற்றை ஏற்றுக் கொண்டு கடன் மறுசீரமைப்பை அறிவிக்கும் அதே வேளை, தமது ஆண்டவரின் வாளைத் தாங்கி இந்த கடனளித்தவர்களுடன் சண்டையிட்டு தமது கடன்களை சரி செய்வோம் என்று அவர்கள் சொல்லக் கூடும். ஏனென்றால், கடனளிப்பவர்களிடமிருந்து எவ்வளவுக்கு கடன் நிவாரணம் கடனாளி நாட்டுக்கு கிடைக்கிறதோ, அவ்வளவுக்கு குறைவாக ஒரு அரசியல்வாதி உள்ளூரில் பொருளாதார மாற்றத்தை செயல்படுத்த வேண்டும். அவர்களுக்கு வெளிநாட்டுக் கடனளிப்பவர்கள் முக்கியமல்ல, உள்ளூரில் வாக் களிக்கும் மக்களே முக்கியம். இதுதான் வணிக கடன் வழங்குனர்களுக்கு இருக்கும் பயம்.

ஒவ்வொரு பிணை முறிக்கடன் மறுசீரமைப் புக்கும் அடிப்படையில் இருப்பது எவ்வாறு அந்த கடன் சுமை கடனாளியாலும் கடனளித்தவராலும் பகிரப்பட வேண்டும் என்ற முடிவு தான். ருரிடானியாவின் நிதிநிலைமையை சரிசெய்வற்காக அதன் குடிமக்கள் மீது எவ்வளவு அசௌகரியம் சுமத்தப்படலாம், அதே வேளை கடன் வழங்கியவர்கள் எவ்வளவு கடன் நிவாரணத்தை ருரிடானியாவுக்கு வழங்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த முடிவு ருரிடானியாவில் எவ்வளவு பொதுத்துறை பணி யாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட வேண்டும், எவ்வளவு தூரம் வரிகளை உயர்த்த வேண்டும், எந்த மானியங்களை அகற்ற வேண்டும், எவ்வளவு ஓய் வூதியம் குறைக்கப்பட வேண்டும் என்பது போன்ற முடிவுகளை உள்ளடக்கும். இதுதான் அடிப்படை. நாங் கள் விரும்புகிறோமோ இல்லையோ இந்த முடிவை எடுக்கக்கூடிய அரசியல் சட்டபூர்வத் தன்மை மற்றும் அதைச் செய்வதற்கான திறமை ஆகிய இரண்டையும் கொண்டுள்ள ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே எங்களி டம் உள்ளது. அதுதான் சர்வதேச நாணய நிதியம் (IMF).

ஒரு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது, ஒரு மூன்றாம் தரப்பு (IMF) அது சம்பந்த மான முடிவுகளை எடுப்பது, அந்த மறுசீரமைப்பில் சேர அழைக்கப்பட்ட வணிகக் கடன் அளித்தவர் களின் பார்வையில் ஒரு சாதகமான விடயம். முடிவு களை IMF எடுக்கும், ஆனால் அதனை வெளியில் சொல்லாது. ஆனால் நீங்கள் ஒரு நாட்டிற்கான IMF திட்டத்தைப் பார்த்தால், அந்த பட்டியலில் கடன் நிவாரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப் பட்டிருப்பதை காணலாம். அந்த தொகையே வணிக கடன் வழங்குபவர்களின் தலைவிதியை வெளிப் படையாக வரையறுக்கிறது. IMF அந்த தொகையை எப்படி பயன்படுத்துவது என்று ஒரு நாட்டிற்குச் சொல்லாது, ஆனால் இந்தத் தொகைக்கு மேல் நீங்கள் செலுத்தக்கூடாது என்று அவர்கள் சொல்வார்கள். அப்படி செலுத்தினால் அந்த திட்டம் உடைந்து போகும். அதனை மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டி வரும்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் மிகவும் கவர்ச்சிகரமான அம்சங்களில் ஒன்றாக நான் இதனை நினைக்கிறேன். இது பல ஆண்டுகளாக இந்த துறையில் பணியாற்றியதிலிருந்து நான் கண்டறிந் தது. வணிகக் கடன்வழங்குனர்கள் ஒரு கடனாளி நாட்டுடன் இணைந்து ஒரு கடன் மறுசீரமைப்பில் ஈடுபடும் பொழுது, அவர்கள் பெரும்பாலும் பார்க்கத் தவறுவது என்னவென்றால் அந்த நடவடிக்கை யின் விளைவு பெரும்பாலும் முன்னரே தீர்மானிக் கப்பட்டு விட்டது என்பது. எந்த நிதி அமைச்சரும் IMF கூறியுள்ளதுக்கு விட மேலாக வணிகக் கடன் வழங்குனர்களுக்கு பணம் செலுத்தும் வற்புறுத்தலுக்கு இணங்கக் கூடாது. அப்படி இணங்கும் பட்சத்தில் முழு திட்டமும் சிக்கலுக்கு உள்ளாகும். ஆனால் இறையியலைப் போலவே பிணைமுறிக் கடன் மறு சீரமைப்பிலும் அங்கு இருப்பவர்களுக்கு தமது முடிவுகளை தாமே எடுப்பதற்கான சுதந்திரம் உள்ளது என்ற மாயையை அவர்கள் மத்தியில் உருவாக்குவது பல சமயங்களில் உபயோகமானது!

முதலாவது கேள்வி, யாருடைய கடன் மறுசீர மைக்கப்படும், யாருடையது மறுசீரமைக்கப்படாது? இங்கே பொதுவான விதிகள் உள்ளன. நீங்கள் ஒரு நாட்டுக்கு பிணைமுறி மூலம் கடன் வழங்குபவராக இருந்தால், எந்த மறுசீரமைப்பு விவாதத்திலும் உங்கள் முதல் நோக்கம் அதிலிருந்து வெளியேறும் வழியைப் பேசுவதே. அதாவது, விலக்கு அளிக்கப் பட்ட கடன் என்று பெயரிடப்படும் ஒரு வகைக்குள் உங்களை வைக்க கடனாளி நாட்டை வற்புறுத்துவதே உங்கள் நோக்கமாக இருக்கும். அவ்வாறான விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கோருவதற் கான காரணம் நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டும்.

இந்த விலக்களிக்கப்படும் கடன் வழங்குனர் பட்டியலில் மிகவும் மேலே இருப்பவை பன்னாட்டு நிதி நிறுவனங்கள், IMF, உலக வங்கி மற்றும் பிராந்திய வங்கிகள், உதாரணமாக ஆசிய அபி விருத்தி வங்கி, ஆகியவை பட்டியலில் மேலே இருப் பார்கள். அதற்கு அவர்களின் சாக்கு, தாங்கள் வேறு யாரும் கடன் கொடுக்க முன்வராத போது கடன் கொடுப்பவர்கள் என்பது. இது அமெரிக்காவில் ஒரு நிறுவனம் சட்டப்படி திவாலான நிலைக்குச் செல்லும் போது நடப்பதைப் போன்றது. சட்டப்படி திவாலான நிலைக்குச் செல்லும் ஒரு நிறுவனம் புதிய கடன்களை வாங்க முடியும். ஆனால் அந்த நிறுவனம் கலைக் கப்படும் நிலை வருமானால் அந்த கலைப்பினால் வரக்கூடிய பணத்தை பெறுவதற்கு புதிய கடன் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கு கீழே அடுத்து இருப்பவை பன்னாட்டு நிதி நிறுவனங்களை போன்று வர முயற்சிக்கும் நிறுவனங்கள். அவர்கள் தமக்கு அரசாங்கங்களுடன் இணைப்பு இருப்பதாக சொல்வார்கள். இந்த வகையில் கரீபியன் அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் ஐரோப் பிய மத்திய வங்கி போன்றவை அடங்கும்.

இவர்களுக்குக் கீழே இருக்கும் அடுத்த குழுக்களைப் பார்ப்போமானால், அவர்கள் தமது கடனை மறுசீரமைத்தால் கடனாளி நாட்டுக்கு மோசமான விளைவுகள் ஏற்படும் என்று வாதிடு பவர்களாக இருப்பார்கள். இந்தக் குழுவுக்கு சிறந்த உதாரணமாக இருப்பவர்கள் வர்த்தக கடன் வழங்கு னர்கள் மற்றும் பொருட்களின் விற்பனையாளர்கள். வர்த்தக கடன் இல்லாமல் ஒரு நாடு இருக்க முடியாது என்ற வாதத்தை முன்வைத்து அவர்கள் பொதுவாக கடன் மறுசீரமைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். அல்லது குறைந்தபட்சம் சில சலுகைகளை பெற முடியும்.

பிணைமுறிக் கடன் மறுசீரமைப்புகளில் குறுகிய கால அரசாங்க கடன்களை விலக்குவது வழக்கமானதாகிவிட்டது. உதாரணமாக அரசாங்கத் தால் விற்கப்படும் குறுகிய கால நாணயமுறிகள். ஏனென்றால், கடன் மறுசீரமைப்பிற்குப் பின் வரும் காலத்தில் உடனடியாக ஒரு நாடு பிணைமுறி வணிக சந்தையை அணுக முடியாது. ஆனால் அந்த நாட்டுக்கு மறுகடனெடுத்தற் தேவை இருக்கும். எனவே குறுகிய கால நாணய முறிகள் போன்றவை கடன் மறுசீர மைப்பில் இருந்து விலக்கப்படுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாகி விட்டது.

நீங்கள் ஒரு கடன் வழங்குனராக இருந்தால் எந்த கடன் மறுசீரமைப்பு விவாதத்திலும் உங்கள் முதல் நோக்கம் அதிலிருந்து வெளியேறும் வழியைப் பார்ப்பதே என்று இதுவரை கதைத்தோம். இரண்டா வது பொது விதி என்னவென்றால், அதிலிருந்து வெளியேறும் வழியை உங்களால் அடைய முடியா விட்டால், மற்ற கடன் வழங்குனர்கள் அனைவரையும் அதில் இணைக்க வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், இது ஒரு வகையில் எவருக்குமே வெற்றி கிடைக்காத ஒரு விளையாட்டு. எவ்வளவுக்கு எவ்வளவு கடன் அளித்தவர்கள் கடன் மறுசீரமைபைப்பில் பங்கேற்கிறார்களோ, அவ்வள வுக்கு அவ்வளவு ஒரு தனி கடனளிப்பாளருக்கான பாதிப்பு குறைவாக இருக்கும். அதாவது நீங்கள் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் இருக்கிறீர்கள் என்று உணரும் பட்சத்தில் மற்ற எல்லோரையும் அந்த எண்ணெய்ச் சட்டிக்குள் இழுத்து விடுமாறு கடனாளி நாட்டுக்கு அழுத்தம் கொடுப்பது உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டத்தில், சில வகையான கடன்கள் மறுசீரமைப்பிலுருந்து விலக்கப்பட வேண்டும் என்ற கடனாளி நாடு வாதிட்டால் அந்த வாதத்தை கணிசமான சந்தேகத்துடன் நீங்கள் ஆராய வேண்டும். இதற்கு சிறந்த உதாரணம், “உள்ளூர் கடன்வழங்குனர் களின் கடன்களை மறுசீரமைக்க நாம் விரும்ப வில்லை” என்று கடனாளி நாடு வெளிநாட்டு கடன் வழங்குனர்களுக்கு சொல்லும். அதற்கு காரணம், முதலாவது, உள்ளூர் கடன் வழங்குனர்கள் வாக்களிப் பவர்களாக இருப்பார்கள், இரண்டாவது, இந்த கடன் வழங்குபவர்கள் பல உள்ளூர் நிதி நிறுவனங்க ளாக இருப்பார்கள். “இந்த கடன்களை மறுசீரமைக்க எங்களை கட்டாயப்படுத்தினால் எமது உள்ளூர் வங்கிப் பொறிமுறையின் தலையை நாங்கள் இழக்க வேண்டி வரும். இந்த கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை ஊடாக நாம் சேமிக்கும் ஒவ்வொரு டாலரும் அந்த வங்கிப் பொறிமுறையை மீளக் கட்டமைப் பதில் செலவழிக்க வேண்டி வரும்.” இவ்வாறான வாதங்களை கடனாளி நாடு முன்வைக்கும்.

(அடுத்த இதழில் தொடரும்)

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

முதலாளித்துவ அரசியல் திட்டங்கள், தொழிற்சங்கப் பிரச்சாரங்கள், இனவாதம் இல்லையென்று சொல்லு கின்ற விழாக்கள் என்பனவற்றையெல்லாம் பார்த் துக் கொண்டு அதற்குள் நின்கிறார்கள். இது அவர் களின் பலத்தைக் காட்டவில்லை. மாறாக அவர்களின் நிலையாமையை காட்டுகிறது.

"கோத்தாகோகம" ஒரு கம்யூனிச சமுதாயத் தின் மாதிரி என்று சுட்டிக்காட்ட விரைந்தவர்களின் அரசியல் ஞானம், விக்டர் ரத்நாயக்கவை ஜனரஞ்சகப் பாடகராக வளர்த்த சிறுபிள்ளைத்தனம், சுனில் போலவும் நந்தா போலவும் மீண்டும் மீண்டும் வேஷம் போட்டுக் கொண்ட சிறுபிள்ளைத்தனம், நாட்டின் காவல் தெய்வங்களுக்கு மலர்களை சமர்ப்பித்த செயற்பாடுகள் என்பவற்றையெல்லாம் நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது.

'தமிழரது விசேட பிரச்சனைக்கு இப்போராட் டத்தில் முக்கியத்துவம் கொடுத்தால் இப்போராட்டத் தால் முதலாளித்துவத்திற்கு ஏற்படும் நெருக்கடி குறைக்கப்பட்டு விடும். வர்க்கப் பிரச்சனையின் முக்கியத்துவமும் குறைந்து விடும்.' என்று போலியான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களின் மனப்பான்மை 'வடக்கு எங்களுடையது. ஆனால் வடக்கின் பிரச்சினைகள் எங்களுடையதல்ல.' என்ப தாகத்தான் இருக்கிறது. 'கம்யூனிச சமுதாயம் உருவாவது வெகு தொலைவில் இல்லை, ஆகவே தேசிய அரசை உருவாக்குவது குறித்து கவலைப்படத் தேவையில்லை' என்றும் போலியாக சொல்லப்படு கிறது.

மேற்குறிப்பிட்ட வாதங்களை தெரிவிப்ப வர்களின் முக்கிய குற்றச்சாட்டு யாதெனில், நாம் குற்ற உணர்ச்சியாற்தான் வடக்கே திரும்புகின்றோம் என்பதாகும். முதலாளித்துவத்துக்கு எதிரான போராட் டம் பிரதானமானது என்கின்ற அதேவேளை அந்தப் போராட்டம் வடக்கிலும் நடக்கிறது என்பதை ஞாபகத் தில் வைத்திருப்பது அவசியம். பிரிவினைவாதம் என்பது முதலாளித்துவ சித்தாந்தத்தால் நமக்கு முன்வைக்கப்படும் மாயை அல்ல. இருப்பினும் இது பொதுவான பார்வையாகும். பிரிவினைக் கோட்பாட் டையிட்டு சோசலிஸ்டுக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சோசலிச அரசுகள் உருவாக்கப்படும் நாள் தேசிய அரசுகள் ஒழிக்கப்பட முடியும். அதுவரை குறைந்த பட்சம் சமஷ்டி ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு போராட்டக்காரர்கள் அஞ்சத் தேவையில்லை.

## "தமிழரின் சுயநிர்ணயத்துக் காக நேரடியானதும், நேர்மை யானதுமான அரசியல் தலையீடு செய்யாது முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளும் போலியான நல்லிணக்க முயற்சிகளே"

அது மாத்திரமல்ல, இந்த தருணத்தில் 'கோடா கோ கம' நூலகத்திலிருந்து யாழ்ப்பாண நூலகத்திற்கு சிங்களப் புத்தகங்களை எடுத்துச் செல்லுபவர்கள் குருந்தூர்மலையில் பௌத்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு எதிராகவும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

தமிழரின் சுயநிர்ணயத்துக்காக நேரடியான தும், நேர்மையானதுமான அரசியல் தலையீடு செய்யாது முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடு களும் போலியான நல்லிணக்க முயற்சிகளே. வடக்குடன் நல்லிணக்கம் என்கின்ற ரீதியில் சில கலைப் படைப்புகளை தூக்கிப்பிடிக்கும் தெற்கின் செயற்பாடு, தெற்கு வடக்கை தங்களது தேவைக்காக பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாத செயல் என்றுதான் சொல்ல வேண்டும். 'வேறுபாடுகளை களைய அன்பை முன் வைப்போம்' என்று வெற்றுக் கோசங்களை முன்வைப்பதை விடுத்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக தென்னிலங்கையில் குரல் எழுப்ப வேண்டும். வடக்கின் மூன்று தசாப்த கால கடின உழைப்புக்கும், தெற்கின் பயங்கரவாதத்தால் தோற்கடிக்கப்பட்ட அவர்களின் அனைத்து வெற்றி களுக்கும், அவர்களின் வலிமிகுந்த தியாகங்களுக் கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதை தெரிவிக்க வேண்டும். இவை செய்யப்பட வேண்டியவை. இது குற்ற உணர்ச்சியால் வந்தது என்று அவர்கள் கூறிக் கொண்டு இருந்தால் இவற்றை செய்வதற்கான சூழல் உருவாக்கப்படாது.

# இராஜபக்சவாதிகளின் களியாட்டம் தற்காலிகமாகவே நசுக்கப்பட்டுள்ளது



**சிங்களத்தில் – தக்ஷிலா ஸ்வர்ணமாலி**
**தமிழாக்கம் – நிமிர்வு / நன்றி:** *www.nivahal.com*

தென்னிலங்கையில் நிலவும் அனைத்து நெருக்கடிகளையும் கிரிக்கெட் வீரர் தசுன் ஷனக தற்காலிகமாக தீர்த்து வைத்து விடுவார் என்று அவர் மீது கவனம் திருப்பப்படுகிறது. 'அடிமைகள் தம்மை பிணைத்திருக்கும் இரும்பு சங்கிலிகள் மீதுகூட காதல் கொள்வர்' என்பதை நாம் அறிவோம். ஆதிக்க சித்தாந்தத்திற்கு அடிபணிந்தோரை விடுதலை செய்வது மிக கடினமான ஒரு பணி யாகும். இதை இன்னொரு வழியில் சொல்ல வேண்டுமானால், தேய்ந்து போன சங்கிலிக்கு வர்ணம் பூசி அதன் மீது காதலை ஏற்படுத்த தெற்கின் பெரும்பான்மையினர் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

இன்று அல்லது நாளை இல்லாவிட்டாலும், ஒருநாள் நாமல் இராஜபக்ச எமது ஜனாதிபதியாக வருவார் என்பது நிச்சயம். இராஜபக்ச கலாச்சாரம் என்கின்ற சிவப்பு கம்பளத்தின் மீதுதான் பாடலி சம்பிக்க ரணவக்க உலாவி வருகின்றார். ஜே.வி.பி., சரத் பொன்சேகா ஆகியோர் இருவரல்ல. இருவரும் ஒருவரே. கறுப்பு ஜூலையை நடத்தியவர்களின் சந்ததியினருக்கு தங்கள் கைகள் தூய்மையானதென காட்ட முடியாது. தேர்தல் நடைமுறையின் ஊடாக தெற்கில் முடிசூடவுள்ளவர்கள் அனைவருக்கும் இருப்பது ஒரே வேர்கள்தான். அவை ஏதோவொரு வகையில் சிங்கள இனவாதமே.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில், போராட்டங்களை தொடர்ந்து கண்டித்து வந்த தெற்கின் பெரும்பான்மை மக்கள், நுகர்வுப் பொருட் களிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாகத் தான் வீதிக்கு இறங்கினர் என்பதை யாரும் மறுக்க முடி யாது. கடைகளில் வரிசைகளுக்கு பதிலாக எந்த விலையிலாவது எரிபொருள், எரிவாயு, தொடர்ச்சியாக மின்சாரம் என்பன கிடைத்திருக்கு மானால் பொதுமக்கள் 'கோ ஹோம் கோட்டா' என்று சொல்லியிருக்கமாட்டார்கள். அதனாற் தான் காலிமுகத்திடலில் ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டது. எப்படியோ இப்போது 'சோடா போத்தல் உடைந்துள்ளது'. ஆனாலும், வழமை போல தென்னிலங்கை மக்கள் அழுத்தங்களுக்கு பழக்கப்பட ஆரம்பித்துள்ளனர்.

'என்னதான் நியாயம் சொன்னாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களது வீடுகளுக்கு தீயிட்டமையை ஏற்க முடியாது.' 'அமரகீர்த்தி அத்துகோரல ஒரு அப்பாவி.' 'சமிந்த லக்ஷன் வீணாக கொல்லப்பட்டார்.' 'இராஜபக்சகள் தவறான தலைமுறையுடன் மோதிவிட்டனர்.' என்றுதான் இந்தப் போராட்டக்காரர்கள் வாதங்களை முன் வைக்கிறார்கள். ஒழுங்கமைக்கப்பட்ட, ஆயுதப் போரட்டங்களை நிராகரிக்கும், அஹிம்சைவாத, வன்முறையற்ற, அரசியல் தெளிவற்ற, கலைப் போராளிகள் என்றுதான் இவர்களை நாம் சொல்ல வேண்டும். 'காலிமுகத்திடலில் நடக்கும் போராட்டம் இந்நாட்டு வரலாற்றில் இடம்பெறும் மிகப்பெரிய போராட்டமாகும்.' 'இலங்கை வரலாற்றில் எந்த ஒரு தலைமுறையும் இப்படியானதொரு வெற்றி கரமான போராட்டத்தை நடத்தியதில்லை.' இவ்வாறாக அரசு, எதிர்க்கட்சி போன்றே, தெற்கின் போராட்டக்காரர்களும், மக்களும் வரலாற்று ரீதியான நகைச்சுவைகளை வழங்கி வருகின்றனர்.

தென்னிலங்கையின் நிலவரம் இந்தப் போராட்டத்துக்கு சாதகமாக இருக்கின்றது. போராட் டக்காரர்கள் குறித்து தென்னிலங்கையில் நிலவும் மனோபாவமும் ஒப்பிட்டளவில் சாதகமாக காணப் படுகிறது. போராட்டத்தை தாக்கினால் தவிர்க்க முடியாமல் ஆளும் வர்க்கத்திற்கு நட்டம் ஏற்படும். இக்காரணங்களால் போராட்டம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது குறித்து அவதானம் செலுத்தப் படுகின்றது. இதனால் பலர் மௌனமாக இருக் கின்றனர், சிலர் போராட்டக் களத்துக்கு செல் கின்றனர். இப்படிச் சென்றவர்கள், பல இன்னல்கள்,

**(23 ஆம் பக்கம் பார்க்கவும்)**

**இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 30.07.2022 அன்று வெளியிடப்பட்டது**